தினபூமி
thinaboomi.com
பூமி: 31 சுற்று: 176 ஆனி 04
RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017
மதுரை, புதன், ஜூன் 18, 2025
சென்னை • மதுரை • திருச்சி • கோவை • நெல்லை • சேலம் • வேலூர் • புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**ஈரான் ராணுவ தளபதி அலி ஷத்மானி கொல்லப்பட்டார்: இஸ்ரேல் அதிகாரப்பூர்வ அறிவிப்பு**
...2-ம் பக்கம்

**யு.பி.ஐ. மூலம் பேங்க் பேலன்ஸ் செக் செய்ய கட்டுப்பாடு ஏன்? என்.பி.சி.ஐ. விளக்கம்**
...3-ம் பக்கம்

**மகளிர் ஒருநாள் தரவரிசை: 2019-க்கு பிறகு மீண்டும் ஸ்மிருதி மந்தனா முதலிடம்**
...6-ம் பக்கம்






சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்ற தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வின் 2-ம் கட்டமாக பரமத்திவேலூர், கவுண்டம்பாளையம் மற்றும் பரமக்குடி ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை தனித்தனியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்து பேசினார்.

### கீழடி விவகாரத்தில் மதுரை வீரகனூரில்

# மத்திய அரசுக்கு எதிராக இன்று தி.மு.க. கண்டன ஆர்ப்பாட்டம்

## திரளாக பங்கேற்குமாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு

சென்னை, ஜூன் 18-

**கீழடி விவகாரத்தில் இன்று மதுரை வீரகனூரில் தி.மு.க. மாணவரணி நடத்தவுள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந் திரளாகக் கூடி மத்திய அரசுக்கு நமது தமிழ்நாட்டின் உணர்வை வெளிப்படுத்துவோம் என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.**

**எதிர்த்துப் போராடி...**

இது தொடர்பாக தமிழக முதல்வர் தனது சமூக வலைதளப் பக்கத்தில், எத்தனை எத்தனை தடைகள் நம் தமிழினத்துக்கு? அத்தனையையும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எதிர்த்துப் போராடி, அறிவியல் துணைக்கொண்டு நம் இனத்தின் தொன்மையை நிறுவி வருகிறோம். இருந்தும் ஏற்க மறுக்கின்றன சில மனங்கள். திருத்த வேண்டியது அறிக்கைகளை அல்ல; சில உள்ளங்களை.

**மாணவரணி சார்பில்...**

இன்று மதுரை வீரகனூரில் தி.மு.க. மாணவரணி நடத்தவுள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகக் கூடி மத்திய அரசுக்கு நமது தமிழ்நாட்டின் உணர்வை வெளிப்படுத்துவோம், அவர்களைத் திருத்துவோம் என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார். முன்னதாக, அறிவியல் பூர்வமாக கீழடி அகழாய்வுகள் நிரூபிக்கப்பட்ட பிறகும் அதை ஏற்று ஆய்வை வெளியிட மறுக்கும் பா.ஜ.க.வை கண்டித்து மதுரையில் வருகிற 18-ம் தேதி தி.மு.க. மாணவர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### பரமக்குடி தொகுதி உள்ளிட்ட

# 3 சட்டசபை தொகுதி நிர்வாகிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை

## கட்சிப்பணிகள், தேர்தல் செயல் திட்டங்கள் குறித்து கேட்டறிந்தார்

சென்னை, ஜூன் 18-

**3 சட்டசபை தொகுதி நிர்வாகிகளுடன் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின், கட்சியின் ஆக்கப்பணிகள், தேர்தல் செயல் திட்டங்கள் குறித்து நிர்வாகிகளிடம் தனித்தனியாக கேட்டறிந்தார்.**

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் அடுத்தாண்டு (2026) நடைபெற உள்ள நிலையில், ஆளும் தி.மு.க., கடந்த ஆண்டிலிருந்தே தேர்தலுக்கான அடிப்படை பணிகளை தொடங்கியது. இதன் ஒரு பகுதியாக மதுரை பொதுக்குழு கூட்டத்தில் அறிவித்தபடி, 'உடன்பிறப்பே வா' என்ற பெயரில், தொகுதிவாரியாக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வை கடந்த 13-ம் தேதி முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

முதல் நாள் அன்று சிதம்பரம், விழுப்புரம், உசிலம்பட்டி தொகுதி நிர்வாகிகளை ஒவ்வொருவராக சந்தித்து கருத்துகளை கேட்டறிந்தார். அப்போது தொகுதி வெற்றி வாய்ப்பு குறித்து, ஏற்கெனவே எடுக்கப்பட்ட சர்வேக்களின் அடிப்படையில், தனித்தனியாக தயாரிக்கப்பட்ட கோப்புகளை வைத்து, அதில் உள்ள விவரங்களின் படி நிர்வாகிகளிடம் விவரங்களை பெற்றார்.

இந்த நிலையில், 'உடன் பிறப்பே வா' எனும் தலைப்பில் தி.மு.க. நிர்வாகிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தி வருகிறார். நேற்றைய கூட்டத்தில் பரமத்திவேலூர், கவுண்டம் பாளையம், பரமக்குடி தொகுதி நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை நடத்தினார். இந்த சந்திப்பில் கட்சியின் ஆக்கப்பணிகள், தேர்தல் செயல் திட்டங்கள் குறித்து நிர்வாகிகளிடம் தனித்தனியாக கேட்டறிந்தார்.

தொகுதி வாரியாக ஒன்றியச் செயலாளர்கள், நகர செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்தாலோசித்து வருகிறார். வரும் 20-ம் தேதி வரை 12 சட்டப்பேரவை தொகுதி நிர்வாகிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்து ஆலோசனை நடத்த உள்ளார். 2021 சட்டமன்றத் தேர்தலில் கைவிட்டுபோன 75 தொகுதிகளை குறிவைத்து மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்துகிறார்.

மேலும் தி.மு.க., கூட்டணிக் கட்சிகள் தோல்வியடைந்த மற்றும் வீக்கான தொகுதிகள் என 100 இடங்களில் கவனம் செலுத்தி வருகிறார்.

### தமிழ்நாட்டில் முதன்முறையாக

# விருதுநகரில் நகர நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் தொடக்கம்

விருதுநகர், ஜூன் 18-

**நில அளவைகளை துல்லியமாக்கும் வகையில் தமிழகத்தில் முதன்முறையாக விருதுநகரில் நகர நில ஆவணங்களை நவீமயமாக்கும் திட்டம் நேற்று (ஜூன் 17) தொடங்கப்பட்டது.**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நில அளவை மற்றும் நிலவரித் துறை மூலம் தமிழகத்தில் உள்ள நில ஆவணங்களை நவீனமயமாக்கும் (நக்‌ஷா) திட்டம் முதல்கட்டமாக காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விருதுநகர் உள்ளிட்ட 7 நகரங்களில் செயல்படுத்தப் பட உள்ளது.

இத்திட்டத்தின் தொடக்க விழா விருதுநகரில் நேற்று நடைபெற்றது. கே.வி.எஸ். மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவில் வருவாய்த் துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் கலந்து கொண்டு நவீன ட்ரோன் மூலம் நகர நில அளவைப் பணிகளைத் தொடங்கிவைத்தார். அப்போது அவர் பேசுகையில், "தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களின்கீழ் 13.85 லட்சம் பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதில், விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் 49,886 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

1.67 கோடி இணைய வழி பட்டா மாறுதல் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 4 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு சுமார் 41.7 லட்சம் இணைய வழி பட்டா மாறுதல் உத்தரவுகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது," என்று அவர் தெரிவித்தார். இவ்விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் வீ.ப.ஜெயசீலன் தலைமை வகித்தார். நில அளவை மற்றும் நிலவரித் திட்டத்துறை இயக்குநர் மதுசூதனன் ரெட்டி முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜேந்திரன், விருதுநகர் எம்.எல்.ஏ. சீனிவாசன், நகராட்சித் தலைவர் மாதவன், கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் பயனாளிகள் பலர் கலந்துகொண்டனர்.

### தெஹ்ரானை விட்டு உடனே வெளியேறுங்கள்:

# இந்தியர்களுக்கு மத்திய அரசு உத்தரவு

## அவசர உதவி எண்களும் அறிவிப்பு

புதுடெல்லி, ஜூன் 18-

**ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள இந்தியர்கள் அந்நகரை விட்டு வெளியேறுமாறு இந்திய வெளியுறவுத் துறை கேட்டுக்கொண்டுள்ளது. அவசர உதவி எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.**

இது தொடர்பாக இந்திய வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில், "தெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகம் செய்த ஏற்பாடுகள் மூலம், பாதுகாப்பு காரணங்களுக்காக தெஹ்ரானில் உள்ள இந்திய மாணவர்கள் நகரத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். போக்குவரத்து வசதிகளைக் கொண்டுள்ள மற்ற குடியிருப்பாளர்களும் அதிகரித்து வரும் பதற்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு நகரத்தை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சில இந்தியர்கள் ஆர்மீனியாவின் எல்லை வழியாக ஈரானை விட்டு வெளியேற வசதி செய்யப்பட்டுள்ளது. சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்கும் நோக்கில் தூதரகம் தொடர்ந்து இந்தியர்களுடன் தொடர்பில் உள்ளது. நிலைமை சீராக இல்லாத நிலையில், மேலும் ஆலோசனைகள் வழங்கப்படலாம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தெஹ்ரானில் இருந்து வெளியேறும் போது உதவி தேவைப்படுபவர்களுக்கு இந்திய தூதரகம் +98-9010144557, +98-9128109115 மற்றும் +98-9128109101 ஆகிய மூன்று தொலைபேசி எண்களை வெளியிட்டுள்ளது. ஈரான் மீது இஸ்ரேல் முழு அளவிலான தாக்குதலை நடத்தும் என்ற அச்சம் அதிகரித்து வருவதால், இத்தகைய அறிவிப்புகளை இந்திய தூதரகம் வெளியிட்டு வருகிறது.

### ஈரான்தான் பிரச்சனைக்கு காரணம்:

# தன்னை பாதுகாத்துக்கொள்ளும் முழுஉரிமை இஸ்ரேலுக்கு உண்டு

## கனடா ஜி-7 மாநாட்டில் தீர்மானம்

கன்னாஸ்கிஸ், ஜூன் 18-

**இஸ்ரேலுக்கு தன்னை தற்காத்துக் கொள்ளும் அனைத்து உரிமையும் உண்டு என்று ஜி 7 நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

ஈரானின் அணுசக்தி திட்டத்தை எதிர்த்து அந்நாடு மீது இஸ்ரேல் கடந்த 13ம் தேதி முதல் தாக்குதல் நடத்தி வருகிறது. பதிலுக்கு ஈரானும், இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதலை தொடர்ந்துள்ளது. இரு நாடுகள் இடையேயான தாக்குதல்களின் விளைவாக மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

இந்நிலையில், இரு நாடுகளுக்கும் இடையில் போர் நிறுத்தம் ஏற்படுத்துவதற்கான திட்டத்தை அமெரிக்க அதிபர் டிரம்ப் வழங்கி உள்ளார் என்று பிரான்ஸ் அதிபர் மேக்ரான் கூறி உள்ளார்.

ஜி7 மாநாட்டில் கலந்து கொண்ட அவர், பின்னர் நிருபர்களிடம் பேசுகையில் கூறியதாவது; இருநாடுகளும் சந்தித்து கருத்துகளை பரிமாறிக் கொள்ள ஒரு வாய்ப்பு உள்ளது. அமெரிக்க அதிபர், இரு நாடுகளிடமும் ஒரு திட்டத்தை முன் வைத்துள்ளார். அதன் மூலம் போர் நிறுத்தம் செய்து கொள்வதற்கான பரந்துபட்ட விவாதங்கள் தொடங்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதை இருநாடுகளும் பின்பற்றுமா என்று நாம் பார்க்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



இதனிடையே, ஜி 7 தலைவர்கள் உச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், இஸ்ரேலுக்கு தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கான அனைத்து உரிமையும் உண்டு.

இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்புக்கான எங்கள் ஆதரவை தெரிவித்துக் கொள்கிறோம். அப்பாவி பொதுமக்கள் பாதுகாக்கப்படுவதும் மிகவும் முக்கியமானது.

பயங்கரவாதம் மற்றும் பிராந்திய அமைதியின்மைக்கு முக்கிய மூல காரணமாக ஈரான் உள்ளது. ஈரான் ஒருபோதும் அணு ஆயுதம் தயாரிக்கக்கூடாது என்பதில் நாங்கள் தொடர்ந்து உறுதியாக இருக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒரே நேரத்தில் உருவானது இரண்டு புயல் சின்னங்கள்

## தமிழகத்தில் 3 நாட்கள் மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜூன் 18-

**ஒரே நேரத்தில் இரண்டு புயல் சின்னம் உருவான நிலையில் தமிழகத்தில் 3 நாட்கள் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நேற்று முன்தினம் வடமேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, நேற்று காலை 05.30 மணி அளவில், தென்மேற்கு வங்கதேசம் மற்றும் அதனை ஒட்டிய மேற்கு வங்காள பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகி, காலை 08.30 மணி அளவில் அதே பகுதிகளில் நிலவுகிறது. இது மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் வலுவடையக்கூடும்.

நேற்று முன்தினம் தெற்கு குஜராத் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, நேற்று காலை 05.30 மணி அளவில், குஜராத் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகி, காலை 08.30 மணி அளவில் அதே பகுதிகளில் நிலவுகிறது. இது அடுத்த 24 மணி நேரத்தில் வடக்கு திசையை நோக்கி நகரக்கூடும்.

இதனால் தமிழகத்தில் இன்று தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி மாவட்டத்தில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது. 19-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 36 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26-27 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உண்மையை ஏற்க சில மனங்கள் மறுக்கின்றன: தங்கம் தென்னரசு


சென்னை, ஜூன் 18-

**நம் மொழியின் பெருமையை உலகறியச் செய்து வருகிறோம். ஆனால், சில மனங்கள் இன்னும் உண்மையை ஏற்க மறுக்கின்றன என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- தமிழினத்தின் பெருமைக்கும், தொன்மைக்கும் பங்கம் விளைவிக்கும் எத்தனையோ தடைகளைக் கடந்து, அறிவியல் ஆதாரங்களுடன் நம் மரபை மொழியின் பெருமையை உலகறியச் செய்து வருகிறோம். ஆனால், சில மனங்கள் இன்னும் உண்மையை ஏற்க மறுக்கின்றன. இத்தகைய மறுப்புகளை எதிர்கொள்ள, அறிக்கைகள் மட்டும் போதாது; மாறாக, சில மனங்களை மாற்ற வேண்டிய கடமை நம்முன் உள்ளது.

நாளை (இன்று) மதுரை விரகனூரில் நடத்தவுள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில், தமிழ்நாட்டின் உணர்வை உலகறியச் செய்ய பெருந்திரளாகக் கூடிட வேண்டும். ஒன்றிய அரசின் மறுப்புகளுக்கு எதிராக, நம் இனத்தின் உரிமைகளை உறுதியாக வெளிப்படுத்த முதலமைச்சர் ஆணையின் படி அழைக்கிறது மாணவர் அணி, வாழ்க தமிழ்!! வெல்க தமிழ்! என கூறினார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| ↑ 677.55 | ↑ 227.90 |
| பாயின்ட் 81,796.15 | பாயின்ட் 24,946.50 |



| தங்கம் | |
|---|---|
| 1 சவரன் | ₹74,440 |
| 1 கிராம் | ₹9,305 |



| வெள்ளி | |
|---|---|
| 1 கிலோ | ₹120,000 |
| 1 கிராம் | ₹120.00 |

| டாலர் |
|---|
| ₹85.79 |

| பெட்ரோல் | டீசல் |
|---|---|
| ₹102.63 | ₹94.24 |



# ஈரான் ராணுவ தளபதி அலி ஷத்மானி கொல்லப்பட்டார்

## இஸ்ரேல் அதிகாரப்பூர்வ அறிவிப்பு



**டெல் அவிவ், ஜூன் 18-**

ஈரானில் புதிதாக நியமிக்கப்பட்ட உயர் ராணுவ தளபதி அலி ஷத்மானியை கொன்று விட்டதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரேல் பாதுகாப்புப் படை வெளியிட்ட செய்திக்குறிப்பில், "ஈரானின் போர்க்கால தலைமைத் தளபதியும், ஆட்சியின் உயர் ராணுவத் தளபதியுமான அலி ஷத்மானி, துல்லியமான உளவுத்துறை தகவல்களை தொடர்ந்து, மத்திய தெஹ்ரானில் ஐ.ஏ.எப். தாக்குதலில் கொல்லப்பட்டார்" என்று ஐ.டி.எப். ட்வீட் செய்தது.

ஈரானின் போர்க்கால தலைமைத் தளபதி அலி ஷத்மானி ஈரானிய ஆயுதப் படைகளின் அவசரகால கட்டளைத் தளபதியாகப் பணியாற்றினார். அவர் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை மற்றும் ஈரானிய ராணுவம் இரண்டிற்கும் கட்டளை தளபதியாக இருந்தார். ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதல் ஐந்தாவது நாளாக தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், இன்று (செவ்வாய்க்கிழமை) ஈரானில் இருந்து ஏவப்பட்ட புதிய ஏவுகணைகளைக் கண்டறிந்துள்ளதாக இஸ்ரேல் ராணுவம் எச்சரித்தது.

ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களின் விளைவாக ஈரான் மற்றும் இஸ்ரேலில் இறப்பு எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஈரானில், இதுவரை 224 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 1,200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இஸ்ரேலில், ஈரானின் பதிலடி தாக்குதல்களில் இதுவரை 24 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 592 பேர் காயமடைந்துள்ளனர்.

## உச்சகட்டத்தை எட்டிய மோதல்: மக்கள்

# தெஹ்ரானை விட்டு உடனடியாக வெளியேற அதிபர் ட்ரம்ப் உத்தரவு

**டெல் அவிவ், ஜூன் 18-**

ஈரான் - இஸ்ரேல் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அனைவரும் தெஹ்ரானை விட்டு உடனடியாக வெளியேறுமாறு ஓர் அச்சுறுத்தும் அழைப்பை வெளியிட்டார்.

ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவுகளில், 'நான் கையெழுத்திடச் சொன்ன ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட்டிருக்க வேண்டும். எவ்வளவு அவமானம், எவ்வளவு மனித உயிரை வீணடிப்பது. எளிமையாகச் சொன்னால், ஈரான் அணு ஆயுதத்தை வைத்திருக்க முடியாது. நான் அதை மீண்டும் மீண்டும் சொன்னேன். பதற்றங்கள் அதிகரிக்கும்போது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைவரும் உடனடியாக தெஹ்ரானில் இருந்து வெளியேற வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து தெஹ்ரானின் மையப்பகுதியிலிருந்து 3 லட்சம் மக்களை வெளியேறுமாறு இஸ்ரேலும் எச்சரித்துள்ளது. நேற்று முன்தினம் இரவு முதலே ஈரான் தலைநகர் தெஹ்ரான் மீது இஸ்ரேல் கடுமையான தாக்குதலை நடத்தி வருவதும் கவனிக்கத்தக்கது.

இதனிடையே, கனடா ஜி7 மாநாட்டில் கலந்து கொண்ட ட்ரம்ப், "ஈரானை ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வலியுறுத்தினேன். ஈரானில் எந்த அணு ஆயுதமும் இருக்கக் கூடாது என்றும் வலியுறுத்தினேன். இதற்காக நான் ஈரானுக்கு 60 நாட்கள் அவகாசம் கொடுத்தேன், அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். 61-வது நாளில் என்ன நடந்தது என்பதை நீங்கள் பார்த்தீர்கள். விரைவில் ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாகும் அல்லது ஏதாவது நடக்கும். ஆனால், ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாகும்" என்று அவர் கூறினார்.

# குடும்பத்துடன் பாதாள அறையில் தஞ்சமடைந்தார் அலி கொமேனி



**டெஹ்ரான், ஜூன் 18-**

இஸ்ரேல் ராணுவத்தின் தாக்குதல் தீவிரமடைந்துள்ள நிலையில் ஈரான் மதத் தலைவர் அயத்துல்லா அலி கொமெனி (86) குடும்பத்துடன் பாதாள அறையில் தஞ்சமடைந்துள்ளார்.

கடந்த 13-ம் தேதி ஈரானின் பல்வேறு பகுதிகள் மீது இஸ்ரேல் விமானப் படை திடீர் தாக்குதலை நடத்தியது. இதில் ஈரானின் 4 அணு சக்தி தளங்கள் அழிக்கப்பட்டன. அந்த நாட்டின் 14 அணு சக்தி விஞ்ஞானிகள், 3 ராணுவ தளபதிகள் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து இஸ்ரேல், ஈரான் இடையே போர் தீவிரமடைந்து வருகிறது. நான்காவது நாளாக போர் நீடித்தது.

இந்நிலையில், ஈரான் மதத் தலைவர் அயத்துல்லா அலி கொமேனி, தலைநகர் தெஹ்ரானின் வடகிழக்கில் லாவிஜான் பகுதியில் உள்ள பாதாள அறையில் குடும்பத்துடன் தஞ்சமடைந்து உள்ளார். இதுகுறித்து இஸ்ரேல் ராணுவ வட்டாரங்கள் கூறியதாவது: ஈரானின் அணு ஆயுத திட்டத்தை அயத்துல்லா அலி கொமேனி முழுமையாக கைவிட வேண்டும். இல்லையெனில் அணு ஆயுத திட்டத்துக்கான கட்டமைப்புகளை இஸ்ரேல் முழுமையாக அழிக்கும். அயத்துல்லா அலி கொமேனி பாதாள அறையில் பதுங்கியிருந்தாலும் எங்களால் தாக்குதல் நடத்த முடியும். இவ்வாறு இஸ்ரேல் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# டெல்லி புறப்பட்ட இண்டிகோ விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்

## அவசர அவசரமாக தரையிறக்கம்

**மும்பை, ஜூன் 18-**

கொச்சி்யில் இருந்து டெல்லி புறப்பட்ட விமானத்தில் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதால் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டது.

ஓமன் நாட்டில் தலைநகர் மஸ்கட்டில் இருந்து கேரளாவின் கொச்சிக்கு நேற்று காலை இண்டிகோ விமானம் வந்தது. அந்த விமானம் பின்னர் கொச்சியில் இருந்து டெல்லி புறப்பட்டது.

காலை 9.31 மணிக்கு கொச்சி விமான நிலையத்தில் இருந்து டெல்லிக்கு விமானம் புறப்பட்டது. அந்த விமானத்தில் 157 பயணிகள், 6 விமான பணியாளர்கள் என மொத்தம் 163 பேர் பயணித்தனர். விமானம் மராட்டிய மாநில வான் எல்லையில் பறந்துகொண்டிருந்தது. நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

கொச்சி விமான நிலையத்திற்கு இமெயில் மூலம் இந்த வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. உடனடியாக விமானிக்கு தகவல் கொடுக்கப்பட்டு விமானம் மராட்டியத்தின் நாக்பூர் விமான நிலையத்தில் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டது. விமானத்தில் இருந்து பயணிகள் அனைவரும் வெளி யேற்றப் பட்டனர். தொடர்ந்து வெடிகுண்டு மிரட்டல் தொடர்பாக விமானம் முழுவதும் சோதனை நடைபெற்று வருகிறது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சுப்ரீம் கோர்ட் நீதிபதி சுந்தரேசனின் தந்தை மறைவு: இ.பி.எஸ். இரங்கல்

**சென்னை, ஜூன் 18-**

சுப்ரீம் கோர்ட் நீதிபதி சுந்தரேஷ் தந்தையார் முத்துசாமி மறைவுக்கு எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, சுப்ரீம் கோர்ட் நீதியரசர் எம்.எம்.சுந்தரேஷின் தந்தையாரும், உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞருமான, விகே. முத்துசாமி காலமானார் என்ற செய்தி கேட்டு மிகுந்த துயருற்றேன். பாசமிகு தந்தையை இழந்து வாடும் நீதியரசர் சுந்தரேஸ்க்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும், நீதித்துறையைச் சார்ந்தோருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த மூத்த வழக்கறிஞர் முத்துசாமி ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஈரான் மீது தாக்குதல் நடத்த டிரம்ப் திட்டமா..?

**ஒட்டாவா, ஜூன் 18-**

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஜி7 என்ற அமைப்பு செயல்படுகிறது. இந்த அமைப்பின் உச்சி மாநாடு ஆண்டுதோறும் நடைபெறுவது வழக்கம். இந்த உச்சி மாநாட்டில் பிற நாடுகள், சர்வதேச அமைப்புகளின் தலைவர்களை விருந்தினர்களாக அழைப்பது வழக்கம். இந்த ஆண்டுக்கான ஜி7 உச்சி மாநாடு கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணம் கனனாஸ்கிஸ் நகரில் கடந்த 3 தினங்களுக்கு முன்பு தொடங்கியது. இந்த மாநாடு நேற்று நிறைவடைகிறது.


இதனிடையே, ஜி 7 உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும்படி இந்திய பிரதமர் மோடிக்கு கனடா பிரதமர் அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பை ஏற்று பிரதமர் மோடி ஜி7 மாநாட்டில் கலந்து கொள்கிறார். இந்தநிலையில், இஸ்ரேல் - ஈரான் இடையே பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையில், ஜி7 உச்சி மாநாட்டில் பங்கேற்றிருந்த அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் பாதியிலேயே வெளியேறி உள்ளார்.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகை செய்தித்துறை செயலாளர் கரோலின் லீவிட் வெளியிட்ட பதிவில், ஜி7 மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி டிரம்ப், இங்கிலாந்து பிரதமர் கியெர் ஸ்டார்மருடன் மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உடனடியாக வெளியேறினார். மத்திய கிழக்கில் ஏற்பட்டிருக்கும் பதற்றத்தால், உச்சிமாநாட்டின் பயணத்தை முடித்துவிட்டு இன்றிரவே வெள்ளை மாளிகை திரும்ப உள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார். கனடா பயணத்தை பாதியில் முடித்துவிட்டு திரும்புவதற்கு முன்னதாக, ட்ரூத் சோஷியல் இணையதளப் பக்கத்தில் டிரம்ப் வெளியிட்டுள்ள பதிவில்,

நான் கையெழுத்துப் போடக் கூறியிருந்த அணு ஆயுத ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட்டு இருக்க வேண்டும். ஈரான் அணு ஆயுதத்தை வைத்திருப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இது வெட்கக் கேடானது. இதனால், மனித வாழ்க்கைதான் வீணாகிறது. இதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது எனப் பதிவிட்டுள்ளார். இந்த நிலையில், அமெரிக்கா திரும்பும் உள்ள ஜனாதிபதி டிரம்ப், வெள்ளை மாளிகையில் உள்ள அவசரகால அறையில், தேசிய பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினர்களை தயாராக இருக்க உத்தரவிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதனிடையே, ஈரானை அமெரிக்காவும் தாக்க வேண்டும் என்று இஸ்ரேல் கோரிக்கை வைத்து வருகின்றது. இந்த நிலையில், அமெரிக்காவும் ஈரான் மீது தாக்குதலை தொடங்கிக் கூடும் என்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவின் பங்கர் - பஸ்டர் குண்டுகளைக் கொண்டு ஈரானின் அணுசக்தி நிலையங்களை தாக்கி அழிக்கும் என்று கூறப்படுகிறது.

**18-06-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** புதிய பணிக்கான உத்திரவுகள் வரலாம். மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவிகள் கிடைக்கும். புதிய திருப்பங்கள் மூலம் எதிர்காலம் ஒளிமயமாக அமையும். ஆராய்ச்சி மனப்பான்மையால் ஆதாயம் உண்டு.

**ரிஷபம்:-** எல்லா நலன்களும் தரும் ஏற்றமிகு நாள். பெயரும், புகழும் உயர்ந்து பெருமை தரும் நாள். தொழிலில் தனவரவு தொடரும் நாள். புத்தாடை, ஆபரணம் புதிதாகச் சேரும் நாள்.

**மிதுனம்:-** மனதில் அமைதி நிலவும். தெய்வீக திருப்பணிகளில் ஈடுபாடு ஏற்படும். உல்லாசப் பயணங்கள் மூலம் உள்ளம் மகிழும். தொழில் விஷயங்களில் அரசு ஆதரவும், நன்மைகளும் உண்டு.

**கடகம்:-** ஆரோக்கியக் குறைவினால், மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். அதன் காரணமாக அரசுப் பணியாளர்கள் லீவு எடுக்க வேண்டியதிருக்கும். தொழில் அபிவிருத்திக்கான திட்டங்கள் தாமதப்படும்.

**சிம்மம்:-** பொருளாதார நிலை உயரும். வியாபார விஷயமாக செல்லும் வெளியூர் பயணங்களால் இலாபம் ஏற்படும். அன்பு மனைவியின் அரவணைப்பால் அகம் மகிழும். அரசால் ஆதாயம் உண்டு.

**கன்னி:-** திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடந்து, எல்லா நலன்களும் தரும் ஏற்றமிகு நாள். பெயரும், புகழும் உயர்ந்து பெருமை தரும் நாள். தொழிலில் தனவரவு தொடரும் நாள்.

**துலாம்:-** குழந்தைகளின் பொறுப்பற்ற தன்மையினால் நிம்மதி குறையும். தங்கள் திறமைக்கு மதிப்பு இருக்காது. நல்லவர் போல் நடித்து நண்பர்கள் நயவஞ்சகம் செய்வார்.

**விருச்சிகம்:-** கொடுக்கல் வாங்கல்களில் சிக்கல்கள் ஏற்பட்டதால். மனக்கலக்கம் ஏற்படும். வீண் செலவுகள், பயணங்களில் தடங்கல்களும் ஏற்படும். தாய்க்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம்.

**தனுசு:-** பழைய பாக்கிகள் விரைவாக வசூலாகும். எதிர்பார்த்த இனங்களில் இருந்து தடையின்றி தனவரவு அதிகரிக்கும். வியாபாரம் சூடு பிடிக்கும். தொழிலில் பணியாட்களின் ஒத்துழைப்பால் இலாபம் அதிகரிக்கும்.

**மகரம்:-** பொருளாதார நிலை ஏற்ற இறக்கமாக இருக்கும். அரசுப் பணியாளர்களுக்கு தேவையற்ற இடமாற்றங்கள் ஏற்படலாம். கூட்டாளிகளை அனுசரித்து சென்றால் பிரச்சனைகளை சமாளிக்கலாம்.

**கும்பம்:-** மனத் திருப்தி மற்றும் தனவரவு தரும் மகிழ்வான நாள். வாக்கு வன்மையால் பயன்பெறும் வளமான நாள். நோக்கும் இடமெல்லாம் ஒளி மிக்க வழி தெரியும் முன்னேற்றமான நாள்.

**மீனம்:-** தாராளமாக இன்றி, பணப்புழக்கம் சுமாராக இருக்கும். வீடு மாற்றம், வேலை மாற்றங்கள் ஏற்படலாம். பெண்களால் விரயச் செலவுகள் அதிகரிக்கும். கோபத்தை அடக்குவது நலம் தரும்.

## மேற்கில் உதயசூரியன் உதிக்காது மறைய தான் செய்யும்:

# மதுரை மேற்கு தொகுதியை தி.மு.க.வினர் கைப்பற்ற முடியாது

## முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பேட்டி



**மதுரை, ஜூன் 18-**

மேற்கில் உதயசூரியன் உதிக்காது மறைய தான் செய்யும்.எனவே மதுரை மேற்கு தொகுதியை தி.மு.க.வினர் கைப்பற்ற முடியாது முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.தெரிவித்தார்.

மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் அரசு அதிகாரிகள் வந்திருக்கிறார்கள். உங்களுக்கு நலத்திட்ட உதவிகள் செய்ய வேண்டும். எனவே உங்களுடைய தொலைபேசி எண் ஆதார் எண் ஸ்மார்ட் கார்டு உள்ளிட்ட விபரங்களை கொடுங்கள் என்று திமுகவினர் விபரங்களை சேகரித்து வருவதாக புகார் மனு ஒன்றை நேற்று அ.தி.மு.க. வழக்கறிஞர் அணியோடு சேர்ந்து முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜு எம்.எல்.ஏ.மதுரை மாவட்ட கலெக்டர் சங்கீதாவிடம் வழங்கினார்.

பின்னர் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது- மேற்கு தொகுதியில் திமுகவினர் பொதுமக்களை சந்தித்து அவர்களுடைய விபரங்களை சேகரித்து வருகின்றனர் என்பதற்கு ஆதாரமாக (புகைப்படத்தை காட்டி) மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு வழங்கி உள்ளோம். திமுகவினர் வீடு வீடாக சென்று விபரங்களை சேகரித்து வருகின்றனர்( அவர்கள் திமுகவினர் தான் என்பது எங்களுக்கு தெரியும் என்று வட்டச் செயலாளரின் பெயரையும் குறிப்பிட்டு ) நாங்கள் கேட்கக் கூடிய விபரங்களை நீங்கள் வழங்காவிட்டால் உங்களுக்கு அரசுடைய உதவிகள் எதுவும் கிடைக்காது எனக் குறி பொதுமக்களிடம் விவரங்களை சேகரித்து வருகின்றனர். தனி மனிதருடைய அனைத்து ஆவணங்களையும் விபரங்களையும் பெற்று செல்வது எதிர்காலத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் வழக்கறிஞர் மூலம் இன்று புகார் மனு வழங்கியிருக்கின்றோம். எங்கள் புகார் மனுவை பெற்றுக் கொண்டு மாவட்ட ஆட்சியாளர் பொதுமக்களிடம் விபரங்களை சேகரிக்க வந்தவர்கள் அரசு அதிகாரிகள் தான் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது. மேலும் அவர்கள் கூறியதற்கான ஆடியோ பதிவு எதுவும் இருந்தால் கொடுங்கள் என மாவட்ட ஆட்சியாளர் கேட்ட நிலையில் எவ்வாறு ஆடியோ கொடுப்பது (தனிநபர் உரையாடலை கொடுப்பது எப்படி முடியும் ). புகைப்பட ஆதாரங்களை கொடுத்திருக்கின்றோம். மேற்கு தொகுதியில் தற்போது முழுமையாக அவர்கள் செயல்பட்டு வருகின்றனர்.மேற்கு தொகுதியில் ஏற்கனவே டிபன் பாக்ஸ் கொடுத்து இருக்கிறார்கள். அனைவரிடமும் டிபன் பாக்ஸ் உள்ள நிலையில் ஹாட் பாக்ஸ் கொடுங்கள் அமைச்சர் மூர்த்தி தலைமையில் நலத்திட்ட உதவிகள் முகாம் ஆகியவற்றில் வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்களை சந்தித்து விபரங்களை கேட்ட அரசு அதிகாரிகளுடைய முழு விபரங்களை சுட்டிக்காட்டினால் மட்டுமே நடவடிக்கை எடுக்க முடியும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்து இருக்கிறார்.பொதுவாக தற்போது மேற்கு தொகுதியில் திமுகவினர் பொதுமக்களுடைய விபரங்களை சேகரிப்பதில் தீவிரமாக செயல்பட்டு வருகிறார்கள்.மதுரையில் உள்ள அனைத்து தொகுதியையும் கைப்பற்றுவது தான் எங்களது எண்ணம். மேற்கில் உதயசூரியன் உதிக்காது மறைய தான் செய்யும். எனவே மதுரை மேற்கு தொகுதி திமுகவினரால் கைப்பற்ற முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

# கர்நாடகாவில் மீண்டும் சாதிவாரி கணக்கெடுப்பு

## முதல்வர் சித்தராமையா தகவல்

**பெங்களூரு, ஜூன் 18-**

கர்நாடகாவில் மீண்டும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று முதல்வர் சித்தராமையா தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவில் மீண்டும் புதிதாக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது என முதல்வர் சித்தராமையா தெரிவித்தார். கர்நாடகாவில் கடந்த 2015-ம் ஆண்டு பிற்படுத் தப்பட்டோர் ஆணையத்தின் சார்பில் ரூ.162 கோடி செலவில் சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதில் மக்களின் சமூக, பொருளாதார, கல்வி குறித்த விவரங்கள் திரட்டப்பட்டன. அந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அதனை ஏற்றதாக அரசாணை வெளியிடப்பட்டது. அதற்கு ஒக்கலிகா, லிங்காயத்து போன்ற சாதிகள் எதிர்ப்பு தெரிவித்ததால், அதன் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் கர்நாடக முதல்வர் சித்தராமையா நேற்று பெங்களூருவில் செய்தியாளர்\களிடம் கூறியதாவது:-

பிற்படுத்தப்பட்டோர் ஆணைய சட்ட பிரிவு 11 (1) ன்படி ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும். அதன்படி கடந்த 2015-ம் ஆண்டு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அந்த கணக்கெடுப்பு இப்போது காலாவதியாகிவிட்டது. அந்த அறிக்கைக்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்தனர். பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் உள்ள சில சாதியினர் புதிதாக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என கோரினர். அதனை ஏற்று மீண்டும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த புதிதாக உத்தரவிடப்பட்டுள்ளது.

இது குறித்து காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆகியோருடன் ஆலோசனை நடத்தினேன். அவர்களின் வழிகாட்டுதலின்படி சாதிவாரி கணக்கெடுப்பை மேற்கொள்ள இருக்கிறோம். எங்களின் தரவுகளை மத்திய அரசு ஏற்க வேண்டும் என்பதே கர்நாடக அரசின் நிலைப்பாடு. புதிதாக இந்த கணக்கெடுப்பை மேற்கொள்ள 80 நாட்கள் வரை ஆகும் என நிபுணர்கள் கூறியுள்ளனர். இவ்வாறு சித்தராமையா தெரிவித்தார்.

# இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதில் புதிய கல்வி கொள்கை முக்கிய பங்கு வகிக்கும்

## துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் பேச்சு

**புதுச்சேரி, ஜூன் 18-**

புதுவைக்கு 3 நாள் அரசு முறை சுற்றுப்பயணமாக வந்த துணை ஜனாதிபதி இறுதி நாளான நேற்று புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள், பேராசிரியர்கள் முன்பாக உரையாற்றினார். அப்போது அவர் பேசியது: "புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவது நாட்டின் கல்விப் பயணத்தில் ஒரு திருப்புமுனையாகக் கருதப்படும். இது உலகின் சிறந்த கல்விக் கொள்கைகளில் ஒன்றாகும். இது தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

புதிய கல்விக் கொள்கை நமது இளைஞர்கள் தங்கள் திறமையையும் ஆற்றலையும் முழுமையாகப் பயன்படுத்த அனுமதிக்கிறது. புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத மாநிலங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். மீண்டும் பார்க்க வேண்டும். ஏனெனில் இந்தக் கொள்கை ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும், 2047-ஆம் ஆண்டில் பிரதமரால் திட்டமிடப்பட்டபடி நாட்டை வளர்ந்த நாடாக மாற்றுவதில் புதிய கல்விக் கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கும்.

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடாக மாறுவதை நோக்கி நாம் முன்னேறிச் செல்லும்போது, உலகளவில் சிறந்த நிறுவனங்களுடன் போட்டியிடும் வகையில் நாடு சிறந்த நிறுவனங்களை உருவாக்க முடியும். நாட்டின் கல்விச் சூழல் அமைப்பில் முதலீடு செய்வதைத் தொழில்களும் நிறுவனங்களும் பரிசீலிக்க வேண்டும்.

உலகில் வேறு எந்த நாடும் நம் நாடு போல் மொழிகளுக்குச் செழுமையாக இல்லை. நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் 22 மொழிகளில் பேசலாம் என்று அவர் கூறினார். அதைத்தொடர்ந்து புதுச்சேரி பயணத்தை நிறைவு செய்து விமான நிலையத்திலிருந்து புறப்பட்டவரைத் துணை நிலை ஆளுநர் கைலாசநாதன், முதல்வர் ரங்கசாமி உள்ளிட்டோர் வழியனுப்பி வைத்தனர்.

## சஸ்பெண்ட் செய்து அரசு உத்தரவு:
# கைதுக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் ஏ.டி.ஜி.பி. ஜெயராம் மேல்முறையீடு

**சென்னை, ஜூன் 18-**



தன்னை கைது செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டதை எதிர்த்து ஏ.டி.ஜி.பி. ஜெயராம் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்துள்ளார். இதற்கிடையே அவரை சஸ்பெண்ட் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக, காதல் திருமண விவகாரத்தில் சிறுவன் கடத்தப்பட்ட வழக்கில் உயர் நீதிமன்றத்தில் ஆஜரான புரட்சி பாரதம் கட்சி தலைவர் பூவை ஜெகன்மூர்த்திக்கு நீதிபதி வேல்முருகன் கடும் கண்டனம் தெரிவித்தார். சீருடையில் நேரில் ஆஜரான ஏ.டி.ஜி.பி. ஜெயராம், நீதிபதி உத்தரவின் பேரில் உயர் நீதி மன்ற வளாகத்திலேயே கைது செய்யப்பட்டார்.

அதேபோல, எம்.எல்.ஏ. பூவை ஜெகன்மூர்த்தியும் கூட்டத்தை கூட்டாமல் தனியாக போலீஸ் விசாரணைக்கு சென்று ஒத்துழைப்பு தரவேண்டும்" என்று உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை ஜூன் 26-ம் தேதிக்கு தள்ளி வைத்தார். ஏ.டி.ஜி.பி. ஜெயராமை உயர் நீதிமன்றத்திலேயே போலீஸார் கைது செய்தனர்.

இதைத் தொடர்ந்து அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமனுடன் டிஜிபி சங்கர் ஜிவால் அவசர ஆலோசனை நடத்தினார். முன்னதாக அவரை பணியிடை நீக்கம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டது. இந்நிலையில் ஏ.டி.ஜி.பி. ஜெயராம் தரப்பில் சுப்ரீம் கோர்ட்டிடம் முறையிடப்பட்டுள்ளது.

## ஹெலிகாப்டரில் கோளாறு:
# பயணத்தை ரத்து செய்தார் பியூஷ் கோயல்

**திருப்பதி, ஜூன் 18-**

ஹெலிகாப்டரில் கோளாறு ஏற்பட்டதால், ஆந்திராவில் தனது பயணத்தை ரத்து செய்தார் பியூஷ் கோயல்.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் நேற்று முன் தினம் காலை தனது குடும்பத்தினருடன் திருப்பதி ஏழுமலையானை தரிசனம் செய்தார். பின்னர் திருச்சானூர் பத்மாவதி தாயாரை பியூஷ் கோயல் தரிசனம் செய்துவிட்டு கிருஷ்ணப்பட்டினம் துறைமுகத்திற்கு செல்வதற்கு தயாரானார்.

அப்போது அவர் செல்லவிருந்த ஹெலிகாப்டரில் கோளாறு ஏற்பட்டதால், தனது பயணத்தை ரத்து செய்துவிட்டு தனது குடும்பத்தாருடன் விமானத்தில் டெல்லி புறப்பட்டுச் சென்றார். தகவல் அறிந்த ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அதிர்ச்சியுற்று, அந்த ஹெலிகாப்டர் இனி தேவையா என்பதை அறிய வேண்டும் என டி.ஜி.பி. ஹரீஷ்குமார் குப்தாவுக்கு உத்தரவிட்டார்.

இதையடுத்து தலைமை கண்காணிப்பு பிரிவு அதிகாரிக்கு டி.ஜி.பி. எழுதியுள்ள கடிதத்தில், "முதல்வர் உள்ளிட்ட வி.வி.ஐ.பி.க்கள் பயணம் செய்யும் ஹெலிகாப்டரில் அடிக்கடி கோளாறு ஏற்படுவது குறித்தும் ஆராய வேண்டும். இனி இந்த ஹெலிகாப்டரை பயன்படுத்தலாமா என்பது குறித்து அறிக்கை அளிக்க வேண்டும்" என கேட்டுக்கொண்டுள்ளார்.

# கீழடி ஆய்வை மேற்கொண்ட அமர்நாத் பணியிடமாற்றம்

**சென்னை, ஜூன் 18-**



கீழடி அகழாய்வு பணியை மேற்கொண்ட அமர்நாத் ராமகிருஷ்ணா நொய்டாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2014-2016 வரை சிவகங்கை மாவட்டம் கீழடியில் முதல் மற்றும் இரண்டாம் கட்ட ஆய்வு மத்திய தொல்லியல் துறை கண்காணிப்பாளராக அமர்நாத் ராமகிருஷ்ணா பணியாற்றியிருந்தார். கீழடி அகழாய்வு பணிகள் உலகம் அறிய முக்கிய காரணமாக இருந்த தமிழ்நாட்டைச் சார்ந்த தொல்லியல் அறிஞர் அமர்நாத் அமர்நாத் ராமகிருஷ்ணா அவரது தலைமையிலான குழு கீழடியில் ஆய்வு செய்த போது ஆயிரக்கணக்கான பழங்கால பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.


ஆய்வு பணிகள் குறித்து இறுதி அறிக்கையை தயாரிக்க அமர்நாத் ராமகிருஷ்ணாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அவர் அசாம் மாநிலத்திற்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து இறுதி அறிக்கை தயாரிக்கும் பணியை பெங்களூரில் உள்ள வேறு தொல்பொருள் அதிகாரிகளிடம் வழங்கியது மத்திய தொல்லியல் துறை.

அசாமில் பணியாற்றி வந்த தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணா சென்னைக்கு மாற்றம் செய்து மத்திய அரசின் தொல்லியல் துறை உத்தரவிட்டது. இந்நிலையில், மீண்டும் கீழடி அகழாய்வு பணியை மேற்கொண்ட அமர்நாத் ராமகிருஷ்ணா நொய்டாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அமர்நாத் அமர்நாத் ராமகிருஷ்ணா தாக்கல் செய்த கீழடி அறிக்கையில் மத்திய அரசு திருத்தம் கோரியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தேசிய தொல்லியல் மற்றும் நினைவு சின்னங்கள் அமைப்பின் இயக்குநராக தற்போது உள்ளார்.

# கர்நாடகாவில் "தக் லைப்" படத்திற்கு தடை விதிக்க முடியாது: சுப்ரீம் கோர்ட்

**புதுடில்லி, ஜூன் 18-**





இயக்குனர் மணிரத்னம் இயக்கத்தில் நடிகர் கமல் ஹாசன் நடித்துள்ள 'தக் லைப்' படம் கடந்த 5-ந் தேதி கர்நாடகம் தவிர உலகம் முழுவதும் திரைக்கு வந்தது. அதற்கு முன்பு கடந்த மாதம் (மே) 24-ந்தேதி சென்னையில் நடைபெற்ற அந்த பட விழாவில், கன்னடம் குறித்து கமலஹாசன் பேசியது சர்ச்சையானது. இதையடுத்து கன்னட சினிமா வர்த்தக சபை, கன்னடம் குறித்த தனது கருத்துக்காக கமல்ஹாசன் மன்னிப்பு கேட்காவிட்டால் அவரது 'தக் லைப்' படத்தை வெளியிட மாட்டோம் என்று அறிவித்தது.

கர்நாடகத்தில் 'தக் லைப்' படம் வெளியாகும் தியேட்டர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்கும்படி கமல்ஹாசனின் ராஜ்கமல் தயாரிப்பு நிறுவனம் கர்நாடக ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி நாகபிரசன்னா, கமல் ஹாசனை கடுமையாக சாடினார். கமல்ஹாசன் மன்னிப்பு கேட்கும்படி நீதிபதி அறிவுரை கூறினார். ஆனால் கமல்ஹாசன் மன்னிப்பு கேட்க மறுத்துவிட்டார்.

இதையடுத்து இந்த வழக்கு கடந்த 20-ந்தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதற்கிடையே மகேஸ் ரெட்டி என்பவர் சுப்ரீம் கோர்ட்டில், கர்நாடகத்தில் 'தக் லைப்' படத்திற்கு தடையை நீக்கி படம் வெளியாகும் தியேட்டர்களுக்கு பாதுகாப்பு வழங்க உத்தரவிட வேண்டும் என்று கோரி மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் பிரசாந்த்குமார் மிஸ்ரா, மன்மோகன் ஆகியோரின் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. இவ்வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள், " தக் லைப் படத்திற்கு தடை விதிக்க முடியாது. திரைப்படம் வெளியாகும் திரையரங்குகளில் பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும். கமல்ஹாசன் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கூறுவது கர்நாடக உயர் நீதிமன்றத்தின் வேலை இல்லை.

தணிக்கைச் சான்றிதழ் பெற்ற எந்தப் படத்தையும் வெளியிடுவதை தடுக்க முடியாது. 'தக் லைப்' திரைப்படம் தொடர்பான வழக்குகளை சுப்ரீம் கோர்ட்டிற்கு மாற்ற வேண்டும். கர்நாடகத்தில் 'தக் லைப்' படத்தை வெளியிடுவதற்கு விதிக்கப்பட்ட தடை குறித்து கர்நாடக உயர் நீதிமன்றம் வரும் வியாழக்கிழமைக்குள் உரிய விளக்கம் அளிக்க வேண்டும்" என்று தெரிவித்து விசாரணையை ஒத்திவைத்தனர்.

# கடலூர் சம்பவம்: இ.பி.எஸ். கண்டனம்

**சென்னை, ஜூன் 18-**



கடலூரில் மூதாட்டி ஒருவருக்கு நடந்த பாலியல் வன்கொடுமை சம்பவம் தொடர்பாக இ.பி.எஸ். கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது: கடலூர் மாவட்டம், பண்ருட்டியில் 5 வாலிபர்கள் கஞ்சா போதையில் மூதாட்டியை பாலியல் வன்கொடுமை செய்ததாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

6 வயது சிறுமி முதல் 80 வயது மூதாட்டி வரை, "அவர்களே அவர்களை காப்பாற்றிக்கொள்ள வேண்டிய" அவலச் சூழலுக்கு எனது கடும் கண்டனம். இதுபோன்ற சம்பவங்களுக்கு அடிப்படை ஆதாரமாக உள்ள போதைப்பொருள் கலாச்சாரத்தை ஒழிக்க உறுதியான நடவடிக்கை எடுக்காத நிலையில் தமிழக மக்களுக்கு பதில் அரசு சொல்லியாக வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சிறுவன் கடத்தல் சம்பவம்:
# திருவாலங்காடு காவல் நிலையத்தில் ஜெகன் மூர்த்தியிடம் தீவிர விசாரணை

**திருத்தணி, ஜூன் 18-**

சிறுவன் கடத்தல் வழக்கு விசாரணைக்காக, நேற்று திருவாலங்காடு காவல் நிலையத்தில் புரட்சி பாரதம் கட்சி தலைவர் பூவை ஜெகன்மூர்த்தி ஆஜரானார்.

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு அருகே காதல் திருமண விவகாரம் தொடர்பாக கடந்த 6-ம் தேதி 17 வயது சிறுவன் கடத்தப்பட்டார். இந்த வழக்கு தொடர்பாக ஏற்கனவே 5 பேர் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில், சிறுவன் கடத்தல் வழக்கில் முன் ஜாமீன் கேட்டு புரட்சி பாரதம் கட்சி தலைவரும், கே.வி.குப்பம் எம்.எல்.ஏ.வுமான பூவை ஜெகன்மூர்த்தி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தார். அந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது.

அப்போது நேரில் ஆஜரான பூவை ஜெகன் மூர்த்தியை, கூட்டத்தை கூட்டாமல் தனியாக சென்று போலீஸ் விசாரணைக்கு ஒத்துழைக்கவேண்டும் என நீதிபதி வேல்முருகன் உத்தரவிட்டார். அந்த உத்தரவின் பேரில் நேற்று காலை 10 மணியளவில் தன் வழக்கறிஞர்களுடன் பூவை ஜெகன் மூர்த்தி திருவாலங்காடு காவல் நிலையத்தில் ஆஜரானார். அவரிடம் போலீஸார், சிறுவன் கடத்தல் சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அகமதாபாத் விமான விபத்து:
# நடிகர் ரஜினிகாந்த் வருத்தம்

**சென்னை, ஜூன் 18-**

''ரொம்ப வருத்தமான விஷயம். ஆண்டவன் அருளால் இனிமேல் இது போன்ற சம்பவங்கள் நடக்கக்கூடாதுனு வேண்டிக்குறேன்'' என அகமதாபாத் விமான விபத்து குறித்து நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்தார்.

குஜராத்தின், அகமதாபாத்தில் ஏர் இந்தியா விமான விபத்தில் அடையாளம் காண முடியாத அளவுக்கு உடல் கருகியும், சிதைந்தும் உயிரிழந்தவர்களை அடையாளம் காண்பதற்காக, டி.என்.ஏ., எனப்படும் மரபணு மாதிரி எடுக்கப்பட்டது.

விமானத்தில் இருந்தவர்கள் மற்றும் மருத்துவக் கல்லுாரி விடுதியில் இருந்தவர்கள் என, 250 பேரின் உறவினர்களிடம் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. இதில், 99 பேரின் உடல்கள் தற்போது வரை அடையாளம் காணப்பட்டுள்ளன. அதில், 64 உடல்கள் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ன.

இந்நிலையில், நேற்று (ஜூன் 17) சென்னை விமான நிலையத்தில் நிருபர்கள் சந்திப்பில் நடிகர் ரஜினி கூறியதாவது:- அகமதாபாத்தில் ஏர் இந்தியா விமான விபத்து ரொம்ப வருத்தப்பட வேண்டிய விஷயம். ரொம்ப மிக மிக வருத்தமாக இருக்கிறது. ஆண்டவன் அருளால் இனி அப்படி நடக்கக் கூடாதுனு வேண்டிக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# 80 வயது மூதாட்டி கூட்டு பாலியல் பலாத்காரம்: வாலிபர் சுட்டுப்பிடிப்பு

**கடலூர், ஜூன் 18-**



கடலூர் அருகே போலீசாரை தாக்க முயன்ற வாலிபரை போலீசார் சுட்டு பிடித்தனர்.

கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்தவர் 80 வயது மூதாட்டி. இவர் நேற்று முன்தினம் மதியம் இயற்கை உபாதை கழிப்பதற்காக அதே பகுதியில் உள்ள சவுக்கு தோப்புக்கு சென்றார். அப்போது அங்கு வந்த 35 வயது மதிக்கதக்க 4 பேர் கொண்ட கும்பல் திடீரென அந்த மூதாட்டியை தாக்கியது. பின்னர் அவர்கள் மூதாட்டியை கூட்டு பாலியல் பலாத்காரம் செய்து, அவர் அணிந்திருந்த ¾ பவுன் நகையை பறித்துக் கொண்டு அங்கிருந்து அந்த கும்பல் தப்பி சென்றது.

இதற்கிடையே அந்த வழியாக சென்ற பொதுமக்கள், மூதாட்டி காயமடைந்து கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். தொடர்ந்து அவர்கள், மூதாட்டியை மீட்டு சிகிச்சைக்காக சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். இதுகுறித்த புகாரின் பேரில் பண்ருட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து தப்பி ஓடிய வாலிபர்களை தேடி வந்தனர்.

இந்த நிலையில், மூதாட்டி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட வழக்கில் தொடர்புடைய சுந்தரவேல் என்பவர் காடாம்புலியூரில் பதுங்கி இருப்பதாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலின் பேரில் காடாம்புலியூரில் உள்ள முந்திரி காட்டுக்கு சென்ற போலீசார் சுந்தரவேலை சுற்றி வளைத்தனர். அப்போது வாலிபர் சக போலீசாரை தாக்க முயன்றதாக கூறப்படுகிறது.

இதனை சுதாரித்துக்கொண்ட பண்ருட்டி ஆய்வாளர் வேலுமணி துப்பாக்கியால் சுந்தரவேலின் காலில் சுட்டார். இதில் அவரது இடது காலில் குண்டு பாய்ந்த நிலையில் சம்பவ இடத்திலேயே சுருண்டு விழுந்தார். இதையடுத்து போலீசார் அவரை சுற்றி வளைத்து பிடித்தனர். மேலும் சுந்தரவேல் தாக்கியதில் காயமடைந்த 2 போலீசாரும் அதே மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 4 பேரில் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் மற்றவர்களை போலிசார் வலைவீசி தேடி வருகின்றனர்.



**தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டத்தில் 40.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித், காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், நீர் வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் தங்கராஜ், செயற்பொறியாளர் ரமேஷ் மற்றும் விவசாயிகள் உடனிருந்தனர்.**

# திருப்புவனம் தடுப்பணை கட்டுமான பணி: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு

**சிவகங்கை, ஜூன் 18-**

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் கட்டப்பட்டு வரும் தடுப்பணை கட்டுமான பணிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று ஆய்வு செய்தார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டத்தில் 40.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகில் வைகை ஆற்றின் வலதுபுறம் பிரியும் பழையனூர் கால்வாய் மற்றும் அதே இடத்தில் இடதுபுறம் பிரியும் கானூர் கால்வாய் முதலியவை மிக முக்கியமான கால்வாய்களாகும்.

தற்சமயம் வைகை ஆற்றின் படுக்கை மட்டம் மண் அரிமானம் காரணமாக சுமார் 1.20 மீ ஆழம் அளவிற்கு மேல் தாழ்ந்து போய்விட்டதால், வைகை ஆற்றில் செல்லும் நீர் கானூர், பழையனூர் கால்வாய்களில் நீர் ஏறிச் செல்ல இயலாத நிலை உள்ளது. இதனால் மேற்காணும் கண்மாய்களின் பாசன ஆதாரம் கடுமையாக பாதிப்படைந்துள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் 22.1.2025 அன்று வைகை ஆற்றின் குறுக்கே 40.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணியினை அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இன்று கானூரில் தடுப்பணை கட்டும் பணியில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்த புகைப்படங்களை பார்வையிட்டு, நீர் வளத்துறை அலுவலர்களிடம் ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து தடுப்பணை கட்டும் பணிகளை நேரில் பார்வையிட்டு, பணிகளை விரைவாக முடித்து விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார், மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித் உள்பட பலர் உடன் இருந்தனர். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சைக்கிளில் இருந்து தவறி கீழே விழுந்த கர்நாடக துணை முதல்வர்

**பெங்களூரு, ஜூன் 18-**



கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார் சைக்கிளை நிறுத்தும்போது நிலைதடுமாறி திடீரென கீழே விழுந்தார்.

கர்நாடக சட்டசபையில் நேற்று காலை உலக சுற்றுச் சூழல் நாள் விழிப்புணர்வு நடைப்பயண நிகழ்வு நடைபெற்றது. பள்ளி மாணவர்கள் கலந்துகொண்ட இந்த நடைப்பயணத்தை கர்நாடக துணை முதல்வர்டி.கே.சிவக்குமார் மற்றும் மாநில சுற்றுச் சூழல் மந்திரி ஈஸ்வர் காண்ட்ரே ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.

அதனை தொடர்ந்து டி.கே.சிவக்குமார் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:- பெங்களூர் பசுமை மற்றும் சுத்தமான சுற்றுச்சூழலுக்கு பெயர் பெற்றது. ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு காலநிலை கிளப்பைத் தொடங்குமாறு நாங்கள் அவர்களிடம் கேட்டுள்ளோம். இந்த ஆண்டு முதல் அதைத் தொடங்குகிறோம் மரங்கள் வளர்க்கப்பட வேண்டும், மழை வர வேண்டும். அதுதான் மனித வாழ்க்கையின் ஒரு பகுதி எனத் தெரிவித்தார்.

இந்த நடைப்பயணத்தை முடித்துவிட்டு, சட்டசபை வளாகத்துக்கு டி.கே.சிவக்குமார் சைக்கிளில் திரும்பினார். அப்போது சைக்கிளை நிறுத்தும்போது நிலைதடுமாறி திடீரென கீழே விழுந்தார். அபோது அருகிலிருந்த பாதுகாப்புப் படையினர் டி.கே.சிவக்குமாரை உடனடியாக தாங்கி பிடித்ததால், அவர் காயமடையவில்லை. இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்கில் வைரலாகி வருகிறது.

# யு.பி.ஐ. மூலம் பேங்க் பேலன்ஸ் செக் செய்ய கட்டுப்பாடு ஏன்..?

## என்.பி.சி.ஐ. விளக்கம்




**மும்பை, ஜூன் 18-**

நெட்வொர்க்கில் தேவையற்ற சுமையை ஏற்படுத்துவதை தவிர்க்க யு.பி.ஐ. வழியாக பேங்க் பேலன்ஸ் செக் செய்ய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக தேசிய பணப் பரிவர்த்தனைக் கழகம் தெரிவித்துள்ளது.

செல்போன்கள் மூலமாக செய்யப்படும் யு.பி.ஐ. பணப் பரிவர்த்தனை களுக்கான புதிய விதிமுறைகள் நேற்று முன்தினம் முதல் அமலுக்கு வந்தது. தற்போது நாடு முழுவதும் சிறிய பெட்டிக்கடை முதல் வணிக வளாகங்கள் வரையில் பிரதானமாக யு.பி.ஐ. மூலமே பணப்பரிவர்த்தனை மேற்கொள்ளப்படுகிறது. யு.பி.ஐ. மூலமான பணப் பரிவர்த்தனை இனி வேகமாக இருக்கும் என தேசிய பண பரிவர்த்தனைக் கழகம் தெரிவித்துள்ளது.

அதாவது, என்.பி.சி.ஐ. நிறுவனத்தின் சுற்றறிக்கையின்படி, பொதுவாகப் பயன்படுத்தப்படும் யு.பி.ஐ. பரிவர்த்தனை நிலையைச் சரிபார்த்தல் மற்றும் பரிவர்த்தனை ரத்து போன்றவற்றுக்கான ரெஸ்பான்ஸ் டைம் எனப்படும் பதிலளிப்பு நேரம் 30 வினாடிகளில் இருந்து 10 வினாடிகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. அக்கவுண்ட் ஐடிக்களை சரிபார்க்கும் பதிலளிப்பு நேரம் 15 வினாடிகளில் இருந்து 10 வினாடிகளாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதேபோல், வாடிக்கையாளர்கள் தங்கள் யு.பி.ஐ. ஐடியில் இருந்து வங்கி கணக்கில் உள்ள இருப்பை ஒரு நாளைக்கு 50 முறை சரி பார்க்க முடியும் என்ற கட்டுப்பாடும் கொண்டு வரப்படுகிறது. நெட்வொர்க்கில் தேவையற்ற சுமையை ஏற்படுத்துவதை தவிர்க்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தமிழகத்தின் தேசிய மரம் பனைமரம், அது எப்படி ஒரு ஜாதியின் மரமாக மாறியது. நான் பனைமரம் ஏறினால் அது ஜாதி பெயராக மாறிவிடுகிறது. புதுச்சேரியில் கள் விற்கப்படுகிறது. தமிழகத்தில் மட்டும் அது போதைப் பொருளானது எப்படி? நான் பனை மரம் ஏறியது தொடர்பாக வழக்குப்பதிவு செய்தால் விசாரணையை எதிர்கொள்ளத் தயார்.

**- சீமான்**



நாட்டு மக்களின் சேமிப்பு குறைந்து கொண்டு வருகிறது. கடன் அதிரிகத்து வருகிறது. ஒருபக்கம் பணவீக்கம் அதிகரித்து வரும் நிலையில், மற்றொரு மக்கள் மக்களின் வருமானம் குறைந்து வருகிறது. இந்தியாவின் சாதாரண மக்கள் பொருளாதார நிலையால் கவலையடைந்து வரும் நிலையில், மோடி அரசு இதில் முற்றிலும் அலட்சியமாக உள்ளது.

**- ஜெய்ராம் ரமேஷ்**



அ.தி.மு.க குறித்து அண்ணாமலை விமர்சனம் செய்திருப்பது அவரது சொந்த கருத்துதானே தவிர, கட்சியின் கருத்து கிடையாது. அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி பலமான கூட்டணி. அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி குறித்து அமித் ஷா, நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட அதிகாரப்பூர்வமான தலைவர்கள் சொல்வது தான் கட்சியின் கருத்து.

**- தமிழிசை**



காவலர் பதவி உயர்வுக்கான கால வரம்பு குறைப்பு திட்டத்தை அனைவருக்கும் பயனளிக்கும்படி மாற்ற வேண்டும். 2002 முதல் 2011-ம் ஆண்டு வரை பணியில் சேர்ந்தவர்களுக்கு தலைமைக்காவலர் பதவி உயர்வை இரு ஆண்டுகள் பின் தேதியிட்டு செயல்படுத்த வேண்டும். இதன் மூலம் பணியில் சேர்ந்த 37,500 பேருக்கு பதவி உயர்வு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**- அன்புமணி**

### விருதுநகர் மாவட்டத்தில்

# மினிபஸ் விரிவாக்க திட்டத்தினை அமைச்சர் தொடங்கி வைத்தார்




**விருதுநகர், ஜூன் 18-**

விருதுநகர் பழைய பேருந்து நிலையத்தில் போக்குவரத்துத் துறை சார்பில், புதிய விரிவான மினிபஸ் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன் தலைமையில், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொடியசைத்து துவக்கி வைத்தார். பின்னர், அமைச்சர் பேசியதாவது.

தமிழ்நாட்டில் போக்குவரத்து வசதி அனைத்துப் பகுதிகளுக்கும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் வழியில் மினி பஸ்கள் எல்லா கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில், கிராமப்புறங்களில் இருக்கும் பொது மக்கள் கிராமங்களுக்கோ அல்லது நகர்புறங்களுக்கோ வேறு இடங்களுக்கோ சிரமமில்லாமல் செல்லும் வகையில் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று தமிழகம் எங்கும் மினி பேருந்துக்கான புதிய விரிவான திட்டத்தின் கீழ் மினி பஸ்களை துவக்கி வைத்துள்ளார்.

தமிழ்நாட்டில் கடந்த 1997-ம் ஆண்டு பேருந்து வசதி பெறாத குக்கிராமங்களில் வாழும் மக்கள் பேருந்து வசதி பெறும் நோக்கில் மினிபஸ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, மாவட்டத்திற்கு 250 மினிபஸ் அனுமதிச்சீட்டுகள் என்ற அடிப்படையில், பேருந்துகள் இயக்கப்படாத வழித்தடத்தில் 16 கி.மீ. மற்றும் பேருந்துகள் இயக்கப்படும் வழித்தடத்தில் 4 கி.மீ. என மொத்தம் 20 கி.மீ. என்ற அளவில் வழித்தடம் நீட்டிப்பு செய்து மினிபஸ் இயக்க அனுமதி பெற்றதைத் தொடர்ந்து, விருதுநகர் மாவட்டத்தில் 131 மினி பஸ்கள் அனுமதிச்சிட்டு வழங்கப்பட்டு தற்போது வரை இயக்கப்பட்டு வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் சிற்றுந்து வசதி ஏற்படுத்த 38 வழிதடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, அதில் மனுக்கள் பெறப்பட்டு, அதில் 6 சிற்றுந்துகளுக்கு புதிய அனுமதி சீட்டு 15.06.2025 அன்று வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சிற்றுந்து வழித்தடங்களில் அரசு வழிகாட்டுதலின்படி 11 சிற்றுந்துகள் வழிதடம் நீட்டிப்பு செய்து இயக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்டத்தில் தொடர்ச்சியாக மக்களின் குறைகளை கேட்டு, போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தி வருகிறோம். நமது மாவட்டத்தை பொறுத்தவரையிலும், அனைத்து வகையான போக்குவரத்து தடங்களில் பேருந்துகள் சென்றடையும் அளவிற்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம் என மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், விருதுநகர் நகர்மன்ற தலைவர் டிமாதவன், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் மாணிக்கம் (விருதுநகர்), தனயசந்திரசேகர். மோட்டார் வாகன ஆய்வாளர் செல்வராஜ், உள்ளாட்சி பிரதிநிதிகள், போக்குவரத்துக்கழக அலுவலர்கள், பணியாளர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருமலைக்கேணியில் சஷ்டி பூஜை



**நத்தம், ஜூன் 18-**


திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஆனி மாத சஷ்டி பூஜை விழா நடந்தது. இதையொட்டி முருக பெருமானுக்கு பால்,பழம்,பன்னீர், விபூதி,சந்தனம், புஷ்பம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், சிறப்பு அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.மேலும் அருகிலுள்ள காமாட்சி மவுனகுருசாமி மடத்திலும் சிறப்பு பூஜைகள் நடந்தது.

இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். இதை போலவே நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவில் உள் பிரகாரத்தில் அமைந்துள்ள தண்டபாணி சன்னதியிலும், குட்டூர் உண்ணாமுலை அம்பாள் கோவிலில் உள்ள முருகப்பெருமான் சன்னதியிலும் சஷ்டியையொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது.இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் உண்டியல் திறப்பு

**ஸ்ரீவில்லிபுத்தூர், ஜூன் 18-**

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவிலில் உள்ள 17 உண்டியல்கள் திறந்து எண்ணும் பணி நேற்று 17 தேதி நடைபெற்றது. விருதுநகர் அறநிலையத்துறை உதவி ஆணையர் மு.நாகராஜன், கோவில் செயல் செள. சக்கரை அம்மாள், ஆய்வாளர் சே.முத்து மணிகண்டன், கண்காணிப்பாளர் ஆவுடையம்மாள் ஆகியோர் முன்னணியில் உண்டியல் திறக்கப்பட்டு எண்ணும் பணி நடைபெற்றது.



இதில் ரொக்க பணம் ரூபாய் 9 லட்சத்து 15 ஆயிரத்து 982ம், 120 கிராம் தங்கமும், 225 கிராம் வெள்ளியும் பக்தர்களால் காணிக்கையாக செலுத்தப்பட்டு இருந்தது. இந்த எண்ணிக்கையின் போது கோவில் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவி குழுவினர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தேனி மாவட்டம் வீரபாண்டி அண்ணாசாலை அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுடன், அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் முன்பருவக் கல்வி குறித்து கலைந்துரையாடினார். இந்நிகழ்வில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பெரியசாமி, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங் உள்பட பல்வேறு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மதுரை மாவட்ட அளவிலான

# சிலம்பாட்ட போட்டியில் வெற்றி பெற்ற திருமங்கலம் மாணவகளுக்கு பாராட்டு



**திருமங்கலம், ஜூன் 18-**

மதுரை மாவட்ட அளவிலான சிலம்பாட்ட போட்டியில் வெற்றி பெற்று அதிக பரிசுகளை வென்ற திருமங்கலம் லீ சாம்பியன் மார்ஷியல் ஆர்ட்ஸ் மற்றும் திருப்பதி ஸ்போர்ட்ஸ் அகாடமி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகிறது. மதுரை மாவட்ட சிலம்பாட்ட கழகத்தின் சார்பில், மாவட்ட அளவிலான சிலம்பாட்ட போட்டி ராயல் வித்யாலயா பள்ளியில் நேற்று நடைபெற்றது.இந்த போட்டியில் 500-க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இந்த

போட்டியை சிலம்பாட்ட கழகத்தின் மாவட்டச் செயலாளர் மாமல்லன் எஸ்.எம். மணி மாஸ்டர் துவக்கி வைத்தார். பல்வேறு பிரிவுகளின் கீழ் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு ராயல் வித்யாலயா பள்ளியின் தாளாளர் ராமானுஜம் பரிசுகள் வழங்கி வெகுவாக பாராட்டினார்.

இந்த போட்டிக்கான ஏற்பாடுகளை சிலம்பாட்ட கழக மாவட்ட தலைவர் கணேசன், பொருளாளர் வடிவேல் ஆகியோர் சிறப்புடன் செய்திருந்தனர்.இந்த மாவட்ட அளவிலான போட்டிகளில் திருமங்கலம் லீ சாம்பியன் மார்ஷியல் ஆர்ட்ஸ் நிறுவனம் மற்றும் அதன் துணை அமைப்பான திருப்பதி ஸ்போர்ட்ஸ் அகாடமியைச் சேர்ந்த 60 க்கும் மேற்பட்ட மாணவ,மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பாக போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.

அதன்படி தனித்திறமை சிலம்பம் பிரிவில் 6 முதல் பரிசும், 4 இரண்டாம் பரிசும், 11மூன்றாம் பரிசும், தொடுமுறை சிலம்பம் போட்டியில் ( சண்டை பிரிவில் ) 6 முதல் பரிசும், 5 இரண்டாம் பரிசும், 1 மூன்றாம் பரிசும் என மொத்தம் 33 பரிசுகளை தட்டிச் சென்றனர். இந்த போட்டியில் மாணவ, மாணவிகள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை திருமங்கலம் லீ சாம்பியன் மார்ஷியல் ஆர்ட்ஸ் நிறுவனர் கராத்தே ஜி.பால்பாண்டி செய்திருந்தார்.

வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு, நவாஸ் ஷெரீப், விக்னேசன், காயத்ரி ஆகியோர் சிறப்பு பயிற்சி அளித்து தயார்படுத்தினர். உலக சோட்டோகான் பெடரேசன் தமிழ்நாடு மற்றும் லீ சாம்பியன் மார்ஷியல் ஆர்ட்ஸ் அமைப்பின் நிர்வாகிகள் உறுப்பினர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

### ஒட்டன்சத்திரத்தில்

# பல்வேறு திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார் அமைச்சர்



**ஒட்டன்சத்திரம்,ஜூன் 18-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட வீரலப்பட்டி, தங்கச்சியம்மாபட்டி, ஓடைப்பட்டி, கே. கீரனூர், ஜோகிபட்டி, வலையபட்டி இடையகோட்டை உள்ளிட்ட பகுதிகளில் சமுதாயக்கூடம், அங்கன்வாடி மையம், நியாய விலைகடை, நாடக மேடை, சாலை மேம்பாடு செய்தல், நிழற்குடை, ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம்,புதிய பள்ளி கட்டிடம் சாலை அமைக்கும் பணிக்கு உள்ளிட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார்.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கள் துறை அமைச்சர் அர. சக்கரபாணி. நிகழ்வில்திட்ட இயக்குனர் திலகவதி, கோட்டாட்சியர் கண்ணன், வட்டாட்சியர் சஞ்சய் காந்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் காமராஜ், நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் பொன்னுவேல், ஒன்றிய செயலாளர்கள் ஜோதிஸ்வரன், தர்மராஜ், பாலு, ஒன்றிய துணைச் செயலாளர்கள் முருகானந்தம், சிவபாக்கியம் ராமசாமி, தமிழ்ச்செல்விராஜா, ராமகிருஷ்ணன், ஒன்றிய அவைத் தலைவர் செல்லமுத்து, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் ராஜேந்திரன், முருகானந்தம்,சுப்பிரமணி விஜயலட்சுமி சண்முகசுந்தரம், சரவணன், ஆனந்தகுமாரி சத்தியமூர்த்தி, முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் செல்வராஜ் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் அசோக்வேலுச்சாமி, மணிபாரதி உள்ளிட்ட முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# டபிள்யூடி பிளாக் எஸ்என்7100 என்விஎம்இ எஸ்எஸ்டி இப்போது இந்தியாவில் கிடைக்கிறது

**சென்னை, ஜூன் 18-**

சான்டிஸ்க் நிறுவனத்தின் விளையாட்டுக்காக உருவாக்கப்பட்ட டபிள்யூடி பிளாக் எஸ்என்7100 என்விஎம்இ™ எஸ்எஸ்டி கேமிங் டிரைவ், இப்போது இந்தியாவில் கிடைக்கிறது. உயர் செயல்திறன் திறன் கொண்ட கண்ணைக் கவரும் காட்சிகள், ஒலி போன்றவற்றுடன் கேம் உலகிற்குள் முழுமையாக மூழ்கி விளையாடக்கூடிய உணர்வை அளிக்கும் கேமர்களின் கோரிப்பு அளவு தொடர்ந்து அதிகரித்து வருகின்ற இன்றைய காலகட்டத்தில், பிரபலமான விளையாட்டாளர்களுக்கு அதிகபட்ச நன்மையை வழங்குவதற்கு இந்த எஸ்என்7100, டபிள்யூடி பிளாக் கேமிங் டிரைவ் மிகவும் பொருத்தமானது.சான்டிஸ்க் நிறுவனத்தின் புதிய டிஎல்சி 3டி நான்ட் தொழில்நுட்பத்துடன் கட்டமைக்கப்பட்ட இந்த எஸ்எஸ்டி 7,250எம்பி/எஸ் எஸ்எஸ்டி வரை வாசிப்பு வேகத்தையும் 6,900எம்பி/எஸ் வரை எழுதும் வேகத்தையும் வழங்குகிறது (1-2டிபி மாதிரிகள்) வழங்குகிறது.

அதிக சேமிப்புத் திறனை எதிர்பார்க்கின்ற பிரபலமான விளையாட்டாளர்கள் மத்தியில், டபிள்யூடி பிளாக் எஸ்என்7100 என்விஎம்இ™ எஸ்எஸ்டி ஆனது 4டிபி2 வரை சேமிப்பு திறனுடன் பெரும் சேமிப்பு விருப்பங்களை வழங்குகிறது. விளையாட்டுகள் மிகவும் சிக்கலானதாகவும், சேமிப்பு தீவிரமாகவும் மாறும் போது, இன்றைய விளையாட்டாளருக்கு நீண்ட விளையாட்டுக்கு சக்தி செயல்திறனை வழங்கும் உயர் செயல்திறன் கொண்ட எஸ்.எஸ்.டி.க்கள் தேவை. எஸ்என்7100 என்விஎம்இ டிஎம் எஸ்எஸ்டி என்பது அடுத்த தலைமுறை கேமிங்கிற்கான ஒரு இயக்கி மட்டுமே, ஏனெனில் இது அற்புதமான செயல்திறன், அதிக திறன் மற்றும் வேகமான சுமை நேரத்தை வழங்குகிறது.இது விளையாட்டாளர்கள் தங்கள் சிறந்த செயல்திறனை வெளிப்படுத்த உதவுகிறது என்று சான்டிஸ்க்கின் சேல்ஸ்-இந்தியா மூத்த இயக்குனர் காலித் வானி கூறினார்.

# கீழடி அகழாய்வு விவகாரத்தில் உண்மை வெல்லும் - சு.வெங்கடேசன்

**மதுரை, ஜூன் 18-**

கீழடி அகழாய்வு விவகாரத்தில் உண்மை வெல்லும் என வெங்கடேசன் எம்.பி. கூறியுள்ளார்.

மதுரை பாராளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் எம்.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழின் தொன்மையையும், கீழடி உண்மையையும் வெளிக்கொண்டு வருவதில் உறுதியாக செயல்பட்ட தொல்லியல் அதிகாரி அமர்நாத் ராமகிருஷ்ணன் இப்பொழுது மீண்டும் இடமாற்றம். கண்டறியப்பட்ட உண்மைக்காக இடைவிடாமல் வேட்டையாடப்படுகிறார் அமர்நாத் இராமகிருஷ்ணன். ஒன்றிய அரசின் வஞ்சக செயல்களுக்கு தமிழக மக்கள் உரிய முறையில் பதில் அளிப்பார்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலக பொருட்கள் - ஜப்தி செய்த கோர்ட்




**பரமக்குடி, ஜூன் 18-**

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலகத்தில் உள்ள பொருட்களை கோர்ட் ஜப்தி செய்தது.

பரமக்குடி தாலுகா, கிளியூரில் ஆதி திராவிடர் மக்களுக்கு வீடு கட்ட 2000ல் நிலம் கையகப்படுத்தப் பட்டது. அப்போது பரமக்குடி குப்துல் ஜமான் புல் புகாரி, சபுரியா பேகம் ஆகியோரது 9 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. இவர்களுக்கு இடத்திற்கான பணம் வழங்கப்படாத நிலையில் பரமக்குடி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொட ரப்பட்டது. ஒரு சென்ட் ரூ.1500 வீதம் 9 ஏக்கருக் கான தொகையை வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது. நிலம் கையகப்படுத்தப் பட்டு 25 ஆண்டுகள் ஆகியும் ரூ.6 லட்சம் வரை அதிகாரிகள் வழங்காமல் இருந்துள்ளனர். தற்போது பாதிக்கப் பட்டவர்களின் பவர் ஏஜெண்டான துல்கிப் கான் மேல் முறையீடு மனு செய்ததில் ஏப்ரல் மாதம் சார்பு நீதிபதி சதீஷ் ஆதிதிராவிடர் நலத்துரை அலுவலகத்தை ஜப்தி செய்ய உத்தரவிட்டார்.

அதன்படி நேற்று முன்தினம் காலை கோர்ட் ஊழியர், மனுதாரர் வக்கீல் ஜெயச்சந்திரன் அதிகாரி உள்ளிட்டோர்களிடம் கடும் வாக்குவாதத்திற்கு பின் அலுவலக கணினியை ஜப்தி செய்தனர்.

மற்றொரு வழக் கில் சில நிமிடங்களுக்கு முன்பு கோர்ட்டில் இருந்து எடுத்து வரப்பட்ட இந்த கணினி மீண்டும் ஜப்தி செய்யப் பட்டது.

# எம்.ஏ. சிதம்பரம் செவிலியர் கல்லூரியில் சர்வதேச யோகா தினம்

**சென்னை, ஜூன் 18-**

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகமும் வி.எச்.எஸ் - எம்.ஏ. சிதம்பரம் செவிலியர் கல்லூரியும் இணைந்து ஜூன் 17ஆம் தேதி காலை 6 மணி அளவில் கல்லூரி வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் ஒரு யோகா நிகழ்வை சிறப்பாக நடத்தினர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மதிப்பிற்குரிய மருத்துவர் கே. நாராயணசாமி நிகழ்வை தலைமை தாங்கி நடத்தியதுடன் மிகச் சிறப்பாக யோகாவும் செய்தார். கேஎல். பாலாஜி, எம்ஏசி கல்வி அறக்கட்டளையின் செயலாளர் வரவேற்புரை ஆற்றினார். இந்த நிகழ்வை நடத்தும் நல்வாய்ப்பினை அளித்த துணைவேந்தருக்கு நன்றி கூறினார். டாக்டர் ஆர்.சுதா கல்லூரியின் முதல்வர் இந்த வருட யோகா தினத்தின் கருப்பொருளான யோகாவின் மூலம் ஒரே பூமி ஒரே நலம் என்பதை அறிமுகப்படுத்தி யோகாவிற்கும் மனித நலனுக்கும் சுற்றுச்சூழலுகும் உள்ள தொடர்பை விளக்கினார்.

துணைவேந்தர் மாணவர்கள் தங்கள் தினசரி வாழ்வில் யோகாவை ஒரு பகுதியாக கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுரை வழங்கி மனதிற்கும் உடலுக்கும் நலம் அளிக்கும் யோகாவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மேலும் யோகாவை முன்னெடுக்கும் கல்லூரியின் பங்களிப்பை பாராட்டினார். யோகா ஆசிரியர் டாக்டர் வெங்கடகிருஷ்ணன் தலைமையில் 300-க்கும் மேற்பட்ட செவிலிய மாணவர்களும் விருந்தினர்களும் யோகா பயிற்சி யையும் தியானமும் செய்தனர் . மாணவிகள் பல யோக ஆசனங்களை செய்து காட்டி தங்கள் தனித்திறமையை வெளிப்படுத்தினர். அவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. வி.ஏ.வேலுசாமி, மேலாளர் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்த உதவினார். டாக்டர். பிரேமா ஜனார்தன், துணை முதல்வர் நன்றியுரை வழங்கினார்.

### வத்தலக்குண்டு அருகே

# புதிய பயணிகள் நிழற்குடை திறப்பு



**வத்தலகுண்டு, ஜூன் 18-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு அருகில் உள்ள பா விராலிப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் முன்பாக நிலக்கோட்டை எம்எல்ஏ தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 7 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பயணிகள் நிழற்குடை திறப்பு விழா வத்தலகுண்டு மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சுதாகர் தலைமையில் நடைபெற்றது.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப பிரிவு செயலாளர் சதீஷ்குமார் வத்தலகுண்டு நகர செயலாளர் பீர்முகமது நிலக்கோட்டை செயலாளர் வி எஸ் எஸ் சேகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. விராலிப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மருத்துவ அலுவலர் யஷ்வத் வரவேற்றார் , சிறப்பு அழைப்பாளர்களாக நிலக்கோட்டை எம்எல்ஏ தேன்மொழி சேகர் கலந்து கொண்டு பயணிகள் நிழற்குடையை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச் செயலாளர் மணிகண்டன் முன்னாள் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் ஓ ராஜேந்திரன் மாவட்ட சிறுபான்மை பிரிவு இணைச் செயலாளர் தம்பி ராஜா பாசறை செயலாளர் வாடிப்பட்டி கோபி ராஜா எம்.ஜி.ஆர். மன்ற துணைச் செயலாளர் ராமமூர்த்தி ஒன்றிய இலக்கிய அணி செயலாளர் பாண்டி ராதா ஜெயலலிதா பேரவை இணைச் செயலாளர் திலிப் குமார் ஒன்றிய மாணவரணி செயலாளர் செல்லப்பாண்டி வத்தலகுண்டு நகரத் துணைச் செயலாளர் குமரேசன் வார்டு செயலாளர் சுரேஷ் முகமது மைதீன் விராலிப்பட்டி அ.தி.மு.க. நிர்வாகிகள் சின்னமுத்து ராமராஜ் ராமசாமி மருத மணி மனோகரன் கண்ணன் மலைச்சாமி வேல் முருகன் குருநாதன் செந்தமிழ் பாண்டி சதீஷ்குமார் மணி தர்மராஜ் குப்புசாமி பாண்டி ஜெயபாலன் சிவ முருகன் பிரபாகரன் விக்னேஷ் எழுவனம்பட்டி நிர்வாகிகள் செல்வராஜ் பரமன் ஜெயராமன் மஞ்சன் உள்பட வத்தலகுண்டு ஒன்றிய, நகர, கிளை அனைத்து பிரிவு நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## உயிர் காக்கும் வால்வு பழுதுநீக்கல் சிகிச்சைகள்:

# இதய இண்டர்வென்ஷனல் சிகிச்சைகளில் முதன்மை வகிக்கும் மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை



**மதுரை, ஜூன் 18-**

தென்தமிழ்நாட்டின் முதன்மை மருத்துவமனை என புகழ் பெற்றிருக்கும் மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை,இதய சிகிச்சைகளில் ஒன்றான இதயத்தின் வால்வுகள் மற்றும் சுவர்கள் போன்ற கட்டமைப்பை பாதிக்கும் நிலைமைகளுக்கு, குறைந்தபட்ச ஊடுருவல் சிகிச்சைகளின் வழியாக சிகிச்சையளிப்பதில் மேம்பட்ட நிபுணத்துவத்தை கொண்டிருக்கிறது. அதிக ஆபத்துள்ள இதய நோயாளிகளின் உயிர்களைக் காப்பாற்றவும், இதயம் தொடர்பான சிக்கல்களால் பாதிக்கப்பட்ட உறுப்புகளின் இயக்கத்தை மீட்டெடுக்கவும் இம்மருத்துவமனையின் உயர் உட்கட்டமைப்பு வசதிகளும், மருத்துவர்கள் குழுவின் அனுபவமிக்க செயல்திறனும், நிபுணத்துவமும் உதவியுள்ளது.

சமீபத்தில், 70 வயதான ஒரு முதியவருக்கு கிழிந்த பெருந்தமனி விரிவாக்கப் பிரச்சனைக்கு சிகிச்சையளிக்க, TEVAR என அழைக்கப்படும் சிகிச்சையை இம்மருத்துவமனை வெற்றிகரமாக செய்திருக்கிறது; இதய கீழறைகளில் பிரச்சனை ஏற்பட்டிருந்த 68 வயதான ஒரு ஆண் நோயாளிக்கு கடுமையாக குறுகி இருந்த வால்வை மாற்றுவதற்கு கதீட்டர் அடிப்படையிலான சிகிச்சையளித்தது. TAVR, என அழைக்கப்படும், அறுவைசிகிச்சை அல்லாத ஒரு மருத்துவச் செயல்முறையில் 41 வயதான ஒரு ஆண் நோயாளிக்கு திறந்த நிலை இதய அறுவைசிகிச்சைக்கான அவசியத்தை தவிர்த்து TEER என்பதனையும் இம்மருத்துவமனை வெற்றிகரமாக செய்து குணப்படுத்தியிருக்கிறது.

கட்டமைப்பு சார்ந்த இதய இண்டர்வென்ஷனல் சிகிச்சைகள் (Structural Interventions) வருவதற்கு முன்பு, அறுவை சிகிச்சை நிபுணர்கள் திறந்த இதய அறுவை சிகிச்சை செய்து, இதயத்தை நிறுத்தி, வால்வுகள் அல்லது சுவர்களை சரிசெய்யவும், மாற்றவும் Heart- Lung மெஷினை பயன்படுத்த வேண்டியிருந்தது. இன்று, அறுவை சிகிச்சை நிபுணர்கள் மேம்பட்ட இமேஜிங் மற்றும் சிறிய கருவிகளைப் பயன்படுத்தி இரத்த நாளங்கள் மூலம் இதயப் பிரச்சினைகளுக்கு சிகிச்சையளிக்கின்றனர். இந்த சிகிச்சைகள், வயதான, அதிக ஆபத்துள்ள நோயாளிகளுக்கு புதிய நம்பிக்கையை வழங்குகின்றன.

இதய சிகிச்சையில் இந்தியாவிலேயே முதலிடம் உருவாக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட மைட்ரல் வால்வு கிளிப் பயன்படுத்தப்பட்டிருப்பது சென்னை தவிர, தமிழ்நாட்டிலே இதுவே முதன்முறையாகும்.

அதிக இடர்வாய்ப்புள்ள மேற்கண்ட இதய சிகிச்சை செயல்முறைகள், மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் இதயவியல் துறையைச் சேர்ந்த பல்துறை நிபுணர்களை உள்ளடக்கிய ஒரு குழுவால் மேற்கொள்ளப்பட்டன. இக்குழுவில் அனுபவம் வாய்ந்த இதயசிகிச்சை மருத்துவர்கள் மற்றும் இதயத்திற்கான மயக்க மருந்தியல் நிபுணர்கள் இடம் பெற்றுள்ளர். இக்குழுவில் இத்துறையின் தலைவர் மற்றும் கட்டமைப்பு சார்ந்த சிகிச்சைகள் பிரிவின் இயக்குநருமான டாக்டர். சிவகுமார்; இதய இண்டர்வென்ஷனல் சிகிச்சை துறை இயக்குநர் டாக்டர். செல்வமணி; அகாடமி பிரிவின் இயக்குநர் டாக்டர். கணேசன்; மரபு வழி கோளாறுகளுக்கான சிகிச்சை நிபுணர் டாக்டர். சம்பத் குமார், எலக்ட்ரோபிசியாலஜி பிரிவுத் தலைவர் டாக்டர். ஜெயபாண்டியன்; இதய இண்டர்வென்ஷனல் சிகிச்சை பிரிவின் இணை நிபுணர் டாக்டர். தாமஸ் சேவியர்; மற்றும் இதய மயக்கவியல் துறையின் முதன்மை நிபுணர் டாக்டர். எஸ். குமார், இதய மற்றும் இரத்தநாள அறுவை சிகிச்சை துறையின் தலைவர் மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர். இருங்கண்ணன், இதய மற்றும் இரத்தநாள அறுவைசிகிச்சை துறையின் முதுநிலைநிபுணர் டாக்டர். ராஜன், இரத்தநாள அறுவை சிகிச்சைத் துறையின், நிபுணர் டாக்டர். பிரபு குமரப்பன் சிதம்பரம் ஆகியோர் இடம் பெற்றிருக்கின்றனர். இம்மருத்துவமனையின் திலீப் பெர்னார்ட் இந்த செய்தியாளர் சந்திப்பு நிகழ்வில் உடனிருந்தார்.

# விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**அருப்புக்கோட்டை, ஜூன் 18-**

அருப்புக்கோட்டை கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கோட்டாட்சியர் கனகராஜ் (பொறுப்பு) தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் கோவிலாங்குளம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சிப்காட் பயன்பாட்டுக்காக நிலங்களை கையகப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. சென்ற கூட்டத்தில் நிலங்கள் கையகப்படுத்தப்படாது என அதிகாரிகள் தெரிவித்த நிலையில் மீண்டும் நிலங்களை கையகப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. வேளாண்மை அறிவியல் நிலையத்தின் நிலங்களை விவசாய பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். இல்லையென்றால் போராட்டம் நடத்தப்படும் என எச்சரித்தனர்.

அதனை தொடர்ந்து பேசிய விவசாயி ராம்பாண்டியன், அருப்புக்கோட்டை சுற்றுவட்டார பகுதிகளில் அதிக அளவு மல்லிகை விவசாயம் நடைபெறுகிறது. சென்ட் தயாரிப்புக்காக மல்லிகை கொள்முதல் செய்யும் போது மல்லிகைக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என பேசினார். விவசாயி பொம்மக்கோட்டை வரதராஜன், பொம்மக்கோட்டையில் இருந்து முத்துராமலிங்கபுரம் வழியாக கொப்புசித்தம்பட்டி செல்லும் சாலையை சீரமைத்து தர வேண்டும் என பேசினார்.

புளியம்பட்டி விவசாயி கண்ணன், புளியம்பட்டி பகுதியில் தற்போது புதிதாக புறவழிச்சாலை அமைக்கப்பட்டு வருகிறது. விவசாயி மச்சேஸ்வரன், காட்டு பன்றிகள் அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள சீமை கருவேல மரங்களில் மறைந்து அதிக அளவு பெருக்கம் அடைகிறது. யார் வேண்டுமானாலும் சீமை கருவேல மரங்களை அகற்றலாம் என உத்தரவு பிறப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கருவேல மரங்களை அகற்றினால் தான் காட்டு பன்றிகள் தொல்லை ஒழியும் என பேசினார்.

மேலும் இந்த கூட்டத்தில் பங்கேற்ற முடுக்கன்குளம் சிவசாமி, நரிக்குடி கோபாலகிருஷ்ணன் விவசாயிகள், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பங்கேற்பதில்லை. அதற்கு பதிலாக அவர்களின் உதவியாளர்களை அனுப்பி வைக்கின்றனர் விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு கிடைப்பதில்லை என புகார் தெரிவித்தனர். இதை கவனித்த கோட்டாட்சியர் கனகராஜ். சென்ற முறையே விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு அனைத்து அதிகாரிகளும் பங்கேற்க வேண்டும் என்று கூறியும் அதை யாரும் கண்டுகொள்ளவில்லை. ஒருமுறை பங்கேற்றால் போதுமா ஒவ்வொரு முறையும் பங்கேற்க வேண்டும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அறிவிப்பின்படி நடக்கிறது. இது குறித்து மாவட்ட ஆட்சியர் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என கூட்டத்தில் பங்கேற்ற மற்ற அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார். இவ்வாறு கூட்டம் நடைபெற்றது.

**ENROLLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within three months thereafter I, M.PAVITHRAN S/o Muniyandi, Aged 27 years, permanently residing at Do. no.18/4, South Market Street, Sivagnagai, Sivagangai District - 630561 intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

M.PAVITHRAN

# ராமேசுவரம் நம்புநாயகி கோவிலில் சௌமியா அன்புமணி நேர்த்திக்கடன்



**ராமேசுவரம், ஜூன் 18-**

பா.ம.க. கட்சியின் பரபரப்பான கோஷ்டி மோதலுக்கு இடையே ராமேசுவரம் நம்புநாயகி அம்மன் கோவிலில் சௌமியா அன்புமணி தனது இரு மகள்களுடன் நேர்த்திக்கடன் செலுத்தினார்.

பா.ம.க.வில் நிறுவனர் ராமதாஸ், தலைவர் அன்புமணி இடையேயான மோதல் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. கட்சிப் பொருளாளர் திலகபாமா, சமூக நீதி பேரவைத் தலைவர் வழக்கறிஞர் பாலு மற்றும் 60 மாவட்டத் தலைவர்கள், செயலாளர்களை ராமதாஸ் நீக்கியுள்ளார். அன்புமணியுடன் சென்ற மாநிலப் பொதுச் செயலாளர் வடிவேல் ராவணனை கட்சிப் பதவியில் இருந்து ஞாயிற்றுக்கிழமை அதிரடியாக நீக்கிவிட்டு, அப்பதவிக்கு முரளி சங்கர் என்பவரை ராமதாஸ் நியமித்துள்ளார்.

இந்நிலையில், பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸின் மனைவி சௌமியா அன்புமணி மற்றும் அவரது இரு மகள்கள் சங்கமித்ரா அன்புமணி, சஞ்சுமித்ரா அன்புமணி ஆகிய மூவரும் ராமேசுவரத்திலிருந்து தனுஷ்கோடி செல்லும் வழியில் அமைந்துள்ள நம்புநாயகி அம்மன் கோவிலுக்கு நேத்திக்கடன் செலுத்துவதற்காக வந்திருந்தார்.

அன்புமணி ராமதாஸின் மகள்கான சங்கமித்ரா அன்புமணி, சஞ்சுமித்ரா அன்புமணி ஆகிய இருவரும் நம்புநாயகி அம்மன் கோவில் வளாகத்தில் அமைந்திருக்கும் அம்மியில் விரலி மஞ்சள் வைத்து அரைத்து சாமிக்கு எடுத்துச் சென்றனர். பின்னர் மூவரும் அரைத்து வைத்திருந்த மஞ்சளுடன், பா.ம.க. கட்சியின் சின்னமான மாம்பழங்களுடன் மலர்களையும் நம்புநாயகி அம்மனுக்கு படைத்து மனமுருகி பிரார்த்தனை செய்தார். மேலும், அம்மனுக்கு சாத்திய பட்டு சேலை உள்ளிட்ட பிரசாதங்களை பெற்றுக் கொண்டனர்.

பா.ம.க.வில் தந்தை - மகன் இடையே ஏற்பட்டுள்ள உச்சகட்ட கோஷ்டி மோதலால் தொடர்ந்து பாமகவில் பல்வேறு அதிரடி மாற்றங்கள் ஏற்பட்டு வரும் நிலையில், பாமக தலைவர் அன்புமணி ராமதாஸின் மனைவி சௌமியா தனது மகள்களுடன் நேர்த்திக்கடன் செலுத்தி சாமி தரிசனம் செய்திருப்பது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

# வீட்டு உபயோக சமையல் பாத்திரங்களில் ட்ரை-பிளை ஹெக்ஸாமேஜிக் அறிமுகம்

**சென்னை, ஜூன் 18-**

இந்தியாவின் முன்னணி சமையலறை மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் பிராண்டான TTK பிரெஸ்டீஜ், சமீபத்தில் சமையல் பாத்திரங்களில் ட்ரை-பிளை ஹெக்ஸாமேஜிக் எனும் அதன் புதிய புத்தாக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளதை அறிவித்துள்ளது. சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த தயாரிப்பு வரிசை, ட்ரை பிளை கட்டுமானத்தின் இணையற்ற மீள்தன்மையை, புரட்சிகரமான தேன்கூடு-பாணியிலான நான்-ஸ்டிக் பூச்சுடன் இணைத்து, உயர் செயல்திறன் கொண்ட சமையலில் ஒரு புதிய சகாப்தத்தை அறிமுகப்படுத்துகிறது.

பிரெஸ்டீஜ் ட்ரை-பிளை ஹெக்ஸாமேஜிக் சமையல் பாத்திரங்கள் பதினைந்து வருட உத்தரவாதத்தாலும், ஒட்டாத பூச்சுக்கு மூன்று வருட உத்தரவாதத்தாலும் ஆதரிக்கப்படுகின்றன, இது பிராண்டின் தரம் மற்றும் நம்பகத்தன்மைக்கான உத்தரவாதத்தை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. புதிய வரிசையும் போட்டித்தன்மையுடன் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது, எதையும் இழக்காமல் மலிவு விலையில் இருக்கும். 20cm மாடலுக்கு வறுவல் பாத்திரங்கள் ₹2845 இல் தொடங்குகின்றன, அதே நேரத்தில் கடாய்கள் ₹2995 இல் தொடங்குகின்றன, இது பிரீமியம் தொழில்நுட்பத்தை இந்திய நுகர்வோருக்கு எட்டக்கூடியதாக வைத்திருக்கிறது. ஹெக்ஸாமேஜிக் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், TTK பிரெஸ்டீஜ் தொழில்துறையில் ஒரு முன்னோடி சக்தியாக தனது பங்கை உறுதிப்படுத்துகிறது, விதிவிலக்கான சமையலறை புதுமைகள் மூலம் கோடிக்கணக்கான இந்திய குடும்பங்களின் வாழ்க்கையை மேம்படுத்த உறுதிபூண்டுள்ளது. சமையல் பாத்திரங்களில் புதுமை மற்றும் செயல்திறனுக்கான தரத்தை இந்த பிராண்ட் உயர்த்தியுள்ளது. எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நீண்டகால மதிப்பை வழங்கும் அதே வேளையில், சமையல் அனுபவத்தை உயர்த்தும் சிந்தனைமிக்க, தொழில்நுட்பம் சார்ந்த சமையலறை தீர்வுகளை உருவாக்குவதற்கான பிரெஸ்டீஜின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இது பிரதிபலிக்கிறது.

# ஸ்பிஐ லைஃப்பின் பாப்பாஹைநா ஃபிலிம்

**சென்னை, ஜூன் 18-**

தந்தையர்கள் பெரும்பாலும் குடும்பத்தின் அமைதியான நங்கூரங்களாக நிற்கிறார்கள் - வலிமை, ஸ்திரத்தன்மை மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வழங்குகிறார்கள். அவர்கள் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை பொறுப்புகளை தடையின்றி சமநிலைப்படுத்தி, தங்கள் குடும்பத்தின் நல்வாழ்வு மற்றும் எதிர்காலத்தை அமைதியாக முன்னுரிமை அளிக்கிறார்கள். இந்த தந்தையர் தினத்தன்று, SBI லைஃப் இன்சூரன்ஸ் அதன் #PapaHainNa டிஜிட்டல் சொத்து - தந்தையின் அமைதியான வலிமை மற்றும் நீடித்த வாக்குறுதிகளை பிரதிபலிக்கும் ஒரு இதயப்பூர்வமான DVC இன் கீழ் "Papa Bhooltey Nahin" ஐ வழங்குகிறது. பாசம், ஒழுக்கம் மற்றும் மீள்தன்மை ஆகியவற்றின் அன்றாட தருணங்களால் ஈர்க்கப்பட்ட இந்தத் திரைப்படம், அவர்கள் பல வேடங்களில் நடித்தாலும், தங்கள் அன்புக்குரியவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை ஒருபோதும் மறக்காத தந்தையர்களுக்கு ஒரு இதயப்பூர்வமான அஞ்சலியாகும்.

டிஜிட்டல் வீடியோ வெளியீட்டு விழாவில் பேசிய எஸ்பிஐ லைஃப் இன்சூரன்ஸின் பிராண்ட், கார்ப்பரேட் கம்யூனிகேஷன் மற்றும் சிஎஸ்ஆர் தலைவர் திரு. ரவீந்திர சர்மா, "தந்தைகள் பெரும்பாலும் நம் வாழ்வில் முக்கியமானவர்கள் - நிலையானவர்கள், தன்னலமற்றவர்கள் மற்றும் ஆழ்ந்த அர்ப்பணிப்பு கொண்டவர்கள். அவர்கள் எப்போதும் தங்கள் உணர்ச்சிகளை உரக்க வெளிப்படுத்தாமல் இருக்கலாம், ஆனால் அவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

"டென்சு கிரியேட்டிவ் ஐசோபாரில், 'பாப்பா ஹைநா'வின் சாராம்சத்திற்கு ஆழமான அர்த்தத்தை சேர்க்க, எங்கள் ஊக்கமளிக்கும் தந்தையர் தின பிரச்சாரமான 'பாப்பா பூல்தே நஹின்' மூலம் மீண்டும் ஒருமுறை எஸ்பிஐ லைஃப் உடன் கூட்டு சேருவதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்," என்று டென்சு கிரியேட்டிவ் ஐசோபரின் தலைவர் சாஹில் ஷா கூறுகிறார்.

# இருளில் மூழ்கியது கமுதி கோட்டைமேடு முன்முனை சந்திப்பு: பொதுமக்கள் அச்சம்

**கமுதி, ஜூன் 18-**

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி கோட்டைமேட்டில் உயர் கோபுர மின் விளக்கு இல்லாததால் மும்முனை சந்திப்பு இருளில் மூழ்கியது.

கமுதியில் கோட்டைமேடு மிகவும் முக்கியமான பகுதியாக உள்ளது.இங்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், நீதிமன்றம், கல்லூரிகள், பள்ளிகள், காவல்துறை அலுவலகம் மற்றும் பல்வேறு அரசு அலுவலகம் அமைந்துள்ள மிக முக்கியமான பகுதியாக கோட்டைமேடு உள்ளது . அதே போல சென்னை-மதுரை ,இராமநாதபுரம்-முதுகுளத்தூர், அருப்புக்கோட்டை- சாயல்குடி ஆகிய பகுதிகளுக்கு செல்ல அதிகளவில் பொதுமக்கள் வந்து செல்லும் இடமாக மும்முனை சந்திப்பு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரே அமைந்துள்ளது.

சில நாளுக்கு முன்பாக உயர் கோபுர மின்விளக்கு மீது லாரி மோதியதில் கீழே விழுந்து சேதமானது அதிகாரிகள் உடனே பார்வையிட்டு அகற்றினார் பிறகு இதுவரை சரிசெய்யபடமால் உயர்கோபுர மின்விளக்கு அமைக்கப்பட்டவில்லை இதனால் மும்முனை சந்திப்பு இருள் சூழ்ந்த பகுதியாக உள்ளது. வெளியூர் பயணிகள், பொதுமக்கள் தினந்தோறும் அதிகளவில் வந்து செல்லும் இடமாக இருப்பதால் அச்சத்துடன் இரவு நேரத்தில் நீண்ட நேரம் காத்திருந்து வெளியூர் செல்லும் பயணிகள், பொதுமக்கள் நலன்கருதி உடனடியாக உயர் கோபுர மின்விளக்கை சரிசெய்து அதே இடத்தில் நிறுவ வேண்டும் என பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

# நத்தத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மக்கள் சந்திப்பு இயக்கம்

**நத்தம், ஜூன் 18-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் பஸ் நிலைய ரவுண்டானா மற்றும் அவுட்டர் பகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மக்கள் சந்திப்பு இயக்கம் நடந்தது. இதற்கு ஒன்றிய செயலாளர் குழந்தைவேல் தலைமை தாங்கினார். மாநில குழு உறுப்பினர் ராணி, மாவட்ட குழு உறுப்பினர்கள் சின்னக்கருப்பன், பெருமாள், முன்னாள் மாவட்ட குழு உறுப்பினர் ஸ்டாலின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் நத்தம் - மதுரைக்கு கூடுதல் பேருந்துகள் இயக்கவும், நத்தம் அரசு மருத்துவமனையை தரம் உயர்த்தி கூடுதல் டாக்டர்களை நியமிக்கவும், செந்துறை புதிய பஸ் நிலையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வலியுறுத்தியும் கோஷங்கள் எழுப்பபட்டது. இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தாலுகா குழு உறுப்பினர்கள், கிளை செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

# நீட் யுஜி 2025: புதுச்சேரி ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ் லிமிடெட் மாணவர்களில் 4 பேர் தேசிய அளவில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்

**புதுச்சேரி, ஜூன் 18-**

மாணவர்களுக்கு தேர்வுக்கு தயாராகும் பயிற்சியில் தேசிய அளவில் முன்னணியில் இருக்கும் ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ் லிமிடெட் (ஏஇஎஸ்எல்) பெருமிதத்துடன் அறிவிக்கிறது. நீட் யுஜி 2025 பரீட்சையில் புதுச்சேரி கிளையின் 4 மாணவர்கள் சிறந்த மதிப்பெண்கள் பெற்று உன்னத சாதனையைப் பெற்றுள்ளனர். இந்த குறிப்பிடத்தக்க வெற்றி, மாணவர்களின் அர்ப்பணிப்பு, கல்வி ஒழுக்கம் மற்றும் ஏஇஎஸ்எல் வழங்கும் தரமான பயிற்சி மற்றும் வழிகாட்டலின் பலனாகும். இந்த முடிவுகள் நேற்று தேசிய தேர்வுகள் அமைப்பு மூலம் வெளியிடப்பட்டன. சிறந்த மாணவர்கள்,பிரித்வி ராஜன் கே – 585/720,டி. ராமநாதன் – 581/720, சோமேஸ்வர் ஜி – 568/720, வைஷ்ணவி – 549/720. இதுகுறித்து மாணவர்கள் கூறியதாவது, "இந்த பயணத்தின் முழுவதும் எங்களை வழிநடத்திய ஆகாஷ் நிறுவத்திற்கு நாங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம். ஒழுங்கமைக்கப்பட்ட பாடத்திட்டம், நிபுணத்துவம் வாய்ந்த கற்பித்தல் மற்றும் தனிப்பட்ட வழிகாட்டல் ஆகியவை எங்களை குறுகிய காலத்தில் சிக்கலான பாடங்களை நன்கு புரிந்து கொள்ள உதவின. ஏஇஎஸ்எல்இல்லாமல் இந்த வெற்றி சாத்தியமாகாது என்றனர்.

ஏஇஎஸ்எல் நிறுவனத்தின் முக்கிய கல்வி மற்றும் வணிகத் தலைவர் தீரஜ்குமார் மிஸ்ரா மாணவர்களை பாராட்டி கூறுகையில், நீட் யுஜி 2025-இல் எங்கள் மாணவர்கள் பெற்றுள்ள இந்த மகத்தான வெற்றிக்கு நாங்கள் மிகவும் பெருமிதம் கொள்கிறோம். நாடு முழுவதும் மாணவர்கள் பங்கேற்கும் இந்த தேர்வில் இவ்வளவு உயர்ந்த மதிப்பெண்கள் பெறுவது சாதாரண விஷயமல்ல. இந்த வெற்றிகள், மாணவர்களின் கடின உழைப்பு, உறுதி, பெற்றோர்களின் ஆதரவு மற்றும் எங்கள் கல்வி குழுவின் உறுதியான உழைப்பை பிரதிபலிக்கின்றன. அவர்களது மருத்துவப் பயணத்தில் தொடர்ந்து வெற்றி பெற வாழ்த்துகள் என்று கூறினார்.


அருப்புக்கோட்டை சப் கோர்ட்டு
H.M.O.P. NO. 148/2024
G. பிரியா
- மனுதார்
-எதிர்-
P. சிவக்குமார்
த/பெ. லேட். போத்திராஜ்
ராமானுஜபுரம்,
அருப்புக்கோட்டை தாலுகா
விருதுநகர் மாவட்டம்.
-எதிர்மனுதார்
தற்சமயம்
ஆசிரியர் P.U.P. பள்ளி,
அரசூர், ஓக்கூர் அஞ்சல்.
மேற்படி மனுவின் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 15-02-2009ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் கோரி மனுதார் மேற்படி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்பதில், மேற்படி எதிர்மனுதார் ஆஜராகி தனது ஆட்சேபணையை தெரிவிக்க 17-07-2025ம் தேதிய வாய்தா ஏற்பட்டு இருக்கிறது. மேற்படி எதிர்மனுதாருக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் மேற்படி கோர்ட்டில் மேற்படி தேதியில் காலை சுமார் 10.00 மணியளவில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப் படும் என்பதை நீதிமன்ற உத்தரவின் பேரில் அறிவிக்கப்படுகிறது.
N. சோலைராஜ், B.Com., B.L,
வழக்கறிஞர், அருப்புக்கோட்டை

மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.
I.A.No: 1 / 2024 in
A.S.No: / 2024
பழனிச்சாமி, S/o.குப்புசாமி,
அன்னை தெரு, அண்ணா நகர்,
மதுரை. சார்பு நீதிமன்றம்,
இராமநாதபுரம்.
---- மனுதாரர்/அப்பீல்தாரர்
--- எதிரிடை ---
சக்தி (எ) சக்திவேல்,
S/o.ரெங்கசாமி, குறிஞ்சி நகர்,
கொடைக்கானல் கிராமம்,
கொடைக்கானல் தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.
--- 3-ம் எதிர்மனுதாரர்/
3-ம் அப்பீல் பிரதிவாதி
அறிவிப்பு
மேலே கண்ட மனுதாரர்/அப்பீல்தாரர் தாக்கல் செய்த I.A.No: 1 / 2024 -ல் தாங்கள் 16.07.2025 அன்று ஆஜராதவற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு நேரிலோ, வழக்கறிஞர் மூலமோ ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் தங்கள் வருகையின்றி ஒருதலைபட்ச உத்தரவு ஏற்படும் என தெரிவிக்கலாயிற்று.
G.ஆறுமுகம்,B.A.,LL.B.,
அட்வகேட், மதுரை.

அருப்புக்கோட்டை சப் கோர்ட்டு
O.S. No.314/2023
எலிசபெத் ராணி
- வாதி
-எதிர்-
பெத்தஎல்லப்பன்,
த/பெ. சிலுவைராஜ்,
1/29, குருந்தமடம்,
அருப்புக்கோட்டை தாலுகா.
-2ம் பிரதிவாதி
மேற்படி வழக்கின் வாதி வழக்கிடை சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்தில், மேற்படி 2ம் பிரதிவாதியான தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் வருகிற 02-07-2025ம் தேதிய வாய்தாவில் காலை சுமார் 10.00 மணியளவில் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
N. சோலைராஜ்,
B.Com., B.L,
வழக்கறிஞர்,
அருப்புக்கோட்டை

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்.
திருமங்கலம்.
ந.க.எண்.2325/2025/ஆ2
மலைச்சாமி, த/பெ.பூமி
4/67,செட்டிகுளம் கிராமம்
கரடிக்கல் அஞ்சல்
திருமங்கலம் வட்டம்
மதுரை மாவட்டம்.
------ மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை மாவட்டம்.
-------------- எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய நான்,எனது பாட்டி பூச்சம்மாள்,க/பெ.அழகர் என்ற அழகர்சாமி என்பவர் கடந்த 25.02.2004-ம் தேதி திருமங்கலம் வட்டம்,செட்டிகுளம் கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.
மனுதாரர்
மலைச்சாமி
செட்டிகுளம் கிராமம்.

மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம், மதுரை அமர்வு.
S.A.No.197 of 2001
Sethu Ammal and 5 others
Appellants
எதிர்
1. M.Thulasiraman
S/o Late Moganathan and Saorja
EMIRCOM
Post Box No.34895
Abudhabi
United Arab Emirates
30th Respondent
2. Maheswaran (aged 30 yrs)
S/o Late Rajamanickam
EMIRCOM
Post Box No.34895
Abudhabi
United Arab Emirates
And 40 others
32nd Respondent
மேற்கண்ட வழக்கில் நீங்கள் எதிர் மனுதாரராக கட்சி சேர்க்கப்பட்டுள்ளீர்கள். மேற்படி வழக்கு 07.03.2025 அன்று விசாரணைக்கு வந்தது. தாங்கள் ஆஜராக வேண்டி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, தாங்களோ தங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ தவறாமல் ஆஜராகும்படி இதன் மூலம் தங்களுக்கு தெரியப்படுத்தப்படுகிறது.
இப்படிக்கு
எஸ்.ரமேஷ்,
நெ.14, கக்கன் தெரு,
ஷெனாய் நகர், மதுரை - 20.

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்.
திருமங்கலம்.
ந.க.எண்:25/2024/அ4
V.முருகன், த/பெ.S.வேலுத்தேவர்
குராயூர் கிராமம், கள்ளிக்குடி வட்டம்,
மதுரை மாவட்டம்.
------- மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை மாவட்டம்.
-------------- எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய நான்,எனது தந்தை S.வேலுத்தேவர்,த/பெ.சங்கிலித்தேவர் என்பவர் கடந்த 04.12.2008-ம் தேதி திருமங்கலம் நகர்,பட்டுநூல்காரன்பேட்டை தெருவில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.
மனுதாரர்
V.முருகன்
குராயூர் கிராமம்.

ஆசிரியர் தேவை
எமது பள்ளியில் காலியாக உள்ள இடைநிலை ஆசிரியர் நிரந்தர பணியிடத்திற்கு TET-PAPER- I ஆசிரியர் தகுதித்தேர்வு தேர்ச்சி பெற்றவர்கள் தேவைப்படுவதால் 26.06.2025-ந் தேதி காலை 10.00 மணிக்கு பள்ளியில் நடைபெறும் நேர்காணலுக்கு தகுதி உடையவர்கள் அசல் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.
செயலாளர்,
D.K.P.AIDED ELE.SCHOOL,
KOORIYUR,
RAMANATHAPURAM-623502
Cell:9894774027

பொது அறிவிப்பு
திண்டுக்கல் மாவட்டம்,பழனி வட்டம்,அ.கலையம்புத்தூர், பச்சை ஆறு, கதவு எண்.444 என்ற முகவரியில் வசிக்கும் திரு.பெருமாள் அவர்கள் மகன் திரு.P.சின்னலட்சுமணன் அவர்கள் கொடுத்த தகவல்படி, நம் கட்சிக்காரருக்கு சொந்தமான திண்டுக்கல் மாவட்டம்,பழனி பதிவு மாவட்டம் , பழனி வட்டம், அயன் கலையம்புத்தூர் , செங்குளம் கண்மாய்ப் பாசனப் புரவில் பட்டா எண்.134, புல எண் 1121/4 நன்செய் முழுப்புலம் ஹெக்.1.21.0 க்கு ஏக் 2 செ.99 ல் மேல் புறம் ஏக் 1. சே 49 ½ ல் உள்ள சொத்து சம்பந்தமாக கடந்த 30.06.2008ம் தேதியன்று பழனி 2 நிர் இணைச்சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 1689/2008ம் ஆவண எண்ணாக பதிவு செய்யப்பட்டதுமான அசல் கிரையப்பத்திரம் சென்ற 04.06.2025ஆம் தேதியன்று பழனி வட்டம்,நெய்க்காரப்பட்டி, மெயின் ரோட்டில் அமைந்துள்ள குமரன் இசேவை மையத்தில் ஜெராக்ஸ் எடுக்க சென்ற சமயம் காணமல் போய்விட்டது. மேற்படி அசல் கிரையப்பத்திரம் யாருக்கேனும் கிடைத்தால் நம் கட்சிக்காரர் வசமோ அல்லது நம் வசமோ ஒப்படைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
M.SENTHIL KUMAR.,B.A.,B.L.,
ADVOCATE & NOTARY PUBLIC,
PALANI. CELL: 94431 89689

பொது அறிவிப்பு
சிவகங்கை மாவட்டம், காரைக்குடி டவுன், காளவாய்பொட்டல், முனிசிபல் தெரு, கதவு எண்.7 ல் வசித்து வந்து, தற்சமயம் கதவு எண்.8A, அன்னை இந்திரா நகர், வேளசேரி, கோபால் 2வது தெரு, டான்சி நகர், சென்னை என்ற முகவரியில் வசித்து வரும் ஞானமணி அவர்கள் மகன் நாராயணசாமி அவர்கள் சார்பாக கொடுக்கும் அறிவிப்பு. மேலே கண்ட எனது கட்சிக்காரர் 20.03.2025-ம் தேதி காரைக்குடி கழனிவாசல் குரூப், நெசவாளர் காலனி, பட்டா எண்.524, பழைய புல எண்.133/10-ல் நத்தம் புதிய புல எண்கள். 330/15, 345/20-க்கு உரிய சொத்தை 11.12.1993ம் தேதியன்று நெசவாளர் காலனி 9ம்வீதி, 2வது குறுக்கு வீதி என்ற முகவரியில் இருக்கும் இராமகிருஷ்ணன் மனைவி ராமுத்தாய் அவர்களிடம் பதிவு இல்லாத பத்திரம் மூலம் கிரையம் வாங்கியதும், கழனிவாசல் குரூப், நெசவாளர் காலனி, பட்டா எண்.904, பழைய புல எண்.133/10-ல் நத்தம் புதிய புல எண்கள். 330/28,321/20,341/9,320/28,246/7-க்கு உரிய சொத்தை 09.10.1993ம் தேதியன்று சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், கோவிலூர் அஞ்சல், நெசவாளர் காலனி என்ற முகவரியில் இருக்கும் சூனச் முதலியார் மகன் முத்துராமலிங்கம் அவர்களிடம் பதிவு இல்லாத பத்திரம் மூலம் கிரையம் பெற்ற அசல் ஆவணங்களை காலேஜ் ரோட்டில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு நகல் எடுக்க சென்ற போது தவறி விழுந்து விட்டது. அது சம்மந்தமாக பல இடங்களில் தேடியும் கிடைக்காத தால் கடந்த 25.04.2025-ம் தேதி சிவகங்கை S.P.அவர்கள் கிரைய ஆவணங்களின் அசலை கண்டுபிடித்து கொடுக்க வேண்டி ஆன்லைன் மூலம் புகார் கொடுத்து புகார் மனுஎண். CAN25218619 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. காணமல் போன ஆவணங்களை கண்டு எடுத்தவர் என்னிடமோ அல்லது எமது கட்சிக் காரரிடமோ ஒப்படைக்க வேண்டியது என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
M.Raju, B.A.,B.L.,
Advocate, Karaikudi.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், பொபது.,
மரபு கட்டடங்கள் வட்டம், சென்னை–5
திருத்தம்
"கடலூர் மாவட்டத்தில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் புதிய தொழில்நுட்ப அருங்காட்சியக காட்சி மற்றும் 3D மாதிரி ஏற்பாடுகளை வழங்குதல்" பணிக்காக, இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு எண்.01/மகவ/2025–2026, நாள்–27.05.2025–ல் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான தேதிகளுக்கு எதிராக பின்வரும் திருத்தம் இதன்மூலம் செய்யப்படுகிறது.
1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பதிவிறக்கம் செய்வதற்கான தொடக்க நாள் மற்றும் நேரம் : 23.06.2025 பிற்பகல் 03.00 மணி முதல்
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணைய வழியில் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம். : 10.07.2025 பிற்பகல் 03.00 மணி வரை
3. ஒப்பந்தப்புள்ளிகள் இணையத்தில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம். : 10.07.2025 பிற்பகல் 03.30 மணி அளவில்
ஒப்பந்தப்புள்ளி கோரும் மேற்கண்ட அறிவிப்பின் மற்ற அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.
கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,
மரபு கட்டடங்கள் வட்டம், சென்னை–5
செ.ம.தொ.இ/3060/ஒப்பந்தப்புள்ளி/2025


Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran Printers at 9, Dindigul Main Road, vilangudi, Madurai - 625 018.
Phone: 0452- 2668165, 0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

## ஐ.சி.சி. மகளிர் ஒருநாள் தரவரிசை:
# ஸ்மிருதி மந்தனா முதலிடம்



**துபாய், ஜூன் 18-**

மகளிர் ஒருநாள் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா 2019-க்குப் பிறகு முதல் முறையாக முதலிடம் பிடித்துள்ளார்.

**மந்தனா முதலிடம்...**

சமீபத்தில் நடந்த இலங்கை மற்றும் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான முத்தரப்புத் தொடரின் இறுதிப் போட்டியில் ஸ்மிருதி மந்தனா சிறப்பாக விளையாடியது முதலிடத்தை மீண்டும் பெற உதவியது. தென் ஆப்பிரிக்காவின் லாரா வால்வார்ட், மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஒருநாள் போட்டிகளில் எடுத்த 27 மற்றும் 28 ரன்கள் உட்பட 19 மதிப்பீட்டு புள்ளிகளை இழந்தது ஸ்மிருதி மந்தனா முன்னிலை பெற உதவியது.

**4-வது இடத்தில்...**

இந்தப் பட்டியலில் இங்கிலாந்தின் நாட் ஸ்கைவர்-பிரண்ட் இரண்டாவது இடமும், தென் ஆப்பிரிக்காவின் வால்வார்ட் 3-வது இடமும் பிடித்துள்ளனர். ஒருநாள் தரவரிசை பட்டியலில் மந்தனா தொடர்ந்து முதல் 10 இடங்களுக்குள் இடம்பிடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல், டி20 தரவரிசையில் ஸ்மிருதி மந்தனா 4-வது இடத்தில் உள்ளார்.

## நிவாரணத்தொகை அதிகரிப்பு

**சென்னை, ஜூன் 18-**

பணியிடத்தில் விபத்தால் உயிரிழக்கும் கட்டுமான தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ. 5 லட்சத்தில் இருந்து 8 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்குவதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் சார்பில் நிவாரணம் வழங்கப்படுகிறது.

## அம்பேத்கருக்கு அவமரியாதை: லல்லு பிரசாத்துக்கு நோட்டீஸ்

**பாட்னா, ஜூன் 18-**

அம்பேத்கருக்கு அவமரியாதை லல்லு பிரசாத்துக்கு பிஹார் எஸ்.சி. ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

லல்லு பிரசாத்தின் 78-வது பிறந்த தினம் கடந்தவாரம் கொண்டாடப்பட்டது. அப்போது எடுக்கப்பட்ட வீடியோவில், உடல்நிலை சரியில்லாத லல்லு சோபாவில் அமர்ந்து, அருகிலுள்ள சோபாவில் கால்களை நீட்டிக்கொண்டுள்ளார்.

அப்போது ஒரு ஆதரவாளர் அம்பேத்கரின் உருவப்படத்தை லல்லு கால்களுக்கு அருகில் வைத்து அவரை வாழ்த்தினார். இது பெரும் புயலை கிளப்பியுள்ளது. அம்பேத்கருக்கு அவமரியாதையை ஏற்படுத்திவிட்டதாக எதிர்க்கட்சிகள் லல்லு மீது குற்றம்சாட்டியுள்ளன. இந்த சம்பவம் குறித்து விளக்கம் அளிக்க பிஹார் எஸ்சி ஆணையம் லல்லுவுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

# பெரியகுளம் மாணவர் விடுதியில் துணை முதல்வர் உதயநிதி ஆய்வு

**சென்னை, ஜூன் 18-**

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தேனி மாவட்டம் பெரியகுளம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மாணவர் விடுதியில் ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்: "பெரியகுளம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மாணவர் விடுதிக்கு சென்ற துணை முதல்வர், மாணவர்களிடம் அவர்களின் சொந்த ஊர், பெற்றோர் குறித்தும், அவர்கள் பயின்று வரும் வகுப்பு குறித்தும் கேட்டறிந்தார். படிப்போடு விளையாடுவதிலும் உள்ள ஆர்வம் குறித்தும், விளையாடுவதின் நன்மை குறித்தும் மாணவர்களுடன் கலந்துரையாடினார். மேலும் மாணவர் விடுதியில் சமையல் கூடத்தில் உணவு தயாரிக்க உள்ள வசதிகளை பார்வையிட்ட துணை முதல்வர், மாணவர்களுக்கு உணவு தயாரிக்கும் பணியாளரிடம் மாணவர்களுக்கு விருப்பமான உணவு குறித்து கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது மாணவர்களுக்காக சமைக்கப்பட்டுள்ள உணவின் தரம் குறித்து ஆய்வு செய்து, உணவு வகைகளை ருசி பார்த்தார். மேலும், விடுதியில் மாணவர்களுக்கான குளியல் அறை, கழிப்பறை ஆகியவை சுத்தமாக பராமரிக்கப் படுகின்றதா என்றும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் ராம கிருஷ்ணன், ஆ.மகாராஜன், கே.எஸ்.சரவணக்குமார், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் ஆகியோர் உடன் இருந்தனர்" என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரோகித்-கோலி கலந்த கலவை சுப்மன் கில்: பட்லர் பாராட்டு

**லண்டன், ஜூன் 18-**

ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி இருவரும் கலந்த கலவையாக சுப்மன் கில் உள்ளார் என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டன் ஜோஸ் பட்லர் பேசியுள்ளார்.

**சுப்மன் கில் கேப்டன்...**

இங்கிலாந்துக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இந்திய அணி இங்கிலாந்து சென்றடைந்துள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி லீட்ஸ் திடலில் வருகிற ஜூன் 20 ஆம் தேதி தொடங்குகிறது. இந்திய அணியின் மூத்த வீரர்களான ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி அண்மையில் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றனர். இதனையடுத்து, டெஸ்ட் போட்டிகளுக்கான இந்திய அணியின் புதிய கேப்டனாக சுப்மன் கில் நியமிக்கப்பட்டார்.

**இங்கிலாந்தில்...**

அவரது தலைமையிலான இளம் இந்திய அணி இங்கிலாந்தை எதிர்த்து விளையாடவுள்ளது. இந்திய அணியின் புதிய கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ள சுப்மன் கில், இந்திய அணியின் முன்னாள் கேப்டன்களான ரோகித் சர்மா மற்றும் விராட் கோலியின் குணங்கள் கொண்டவராக உள்ளார் என இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டன் ஜோஸ் பட்லர் தெரிவித்துள்ளார்.

**கலவையாக...**

இது தொடர்பாக அவர் பேசியதாவது: சுப்மன் கில் உண்மையில் மிகுந்த திறமை வாய்ந்த இளம் வீரர். பேசும் போது அவர் மிகவும் அமைதியானவராக உள்ளார். ஆனால், ஆடுகளத்தில் அவர் ஆக்ரோஷமானவராக இருப்பதாக நான் உணர்கிறேன். அவர் ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி இருவரும் கலந்த கலவையாக உள்ளார்.

**தனித்துவமான ஸ்டைல்...**

விராட் கோலி ஆக்ரோஷமாக செயல்படுபவர். அவர் இந்திய அணியில் பெரிய அளவில் மாற்றத்தைக் கொண்டு வந்தார். ரோகித் சர்மா மிகவும் அமைதியாக இருப்பார். இவர்கள் இருவருக்கும் நடுவில் சுப்மன் கில் இருக்கிறார். இவர்கள் இருவரிடமிருந்தும் சுப்மன் கில் நிறைய கற்றுக்கொண்டுள்ளார். இருப்பினும், அவரது தனித்துவமான ஸ்டைலில் அணியை வழிநடத்துவார்.

**பிரதமருக்கு அடுத்து...**

இந்திய அணியை கேப்டனாக வழிநடத்துவது மிகவும் கடினமான ஒன்று என நினைக்கிறேன். மிகவும் செல்வாக்கு வாய்ந்த நபர்கள் வரிசையில் பிரதமருக்கு அடுத்து மூன்றாவது அல்லது நான்காவது இடங்களில் இந்திய அணியின் டெஸ்ட் கேப்டனே இருப்பார் என நினைக்கிறேன். இந்தியாவில் உள்ள 150 கோடி மக்களும் கிரிக்கெட் மீது அதீத ஆர்வம் கொண்டுள்ளனர். அதனால், இந்திய அணியை கேப்டனாக வழிநடத்துவது சுப்மன் கில்லுக்கு மிகவும் கடினமாக இருக்கப் போகிறது என நினைக்கிறேன் என்றார்.

## இங்கிலாந்து டெஸ்ட் தொடர்:
# இந்திய வீரர்களை வீட்டிற்கு அழைத்து பேசினார் கோலி!

**லண்டன், ஜூன் 18-**

தொடக்க ஆட்டத்திற்கு முன் இந்திய வீரர்களை லண்டனில் உள்ள தனது வீட்டிற்கு விராட் கோலி அழைத்துள்ளார்.

**திடீர் ஓய்வு...**

இந்திய அணியின் நட்சத்திர பேட்ஸ்மேன் விராட் கோலி. இவர் இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், திடீரென ஓய்வு முடிவை அறிவித்தார். ஆனாலும், ஒருநாள் போட்டியில் தொடர்ந்து விளையாட இருக்கிறார். ஓய்வுபெற்ற போதிலும் இங்கிலாந்து தொடரில் இந்திய அணியின் நடவடிக்கைகளை விராட் கோலி கண்காணிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வீட்டிற்கு அழைத்து...**

இந்நிலையில், லீட்சில் தொடக்க ஆட்டத்திற்கு சில நாட்களுக்கு முன் புதிய டெஸ்ட் கேப்டன் சுப்மன் கில், துணை கேப்டன் ரிஷப் பண்ட், சிராஜ் மற்றும் சிலரை லண்டனில் உள்ள தனது வீட்டிற்கு விராட் கோலி அழைத்துள்ளார். கென்ட்டில் நடந்த அணிகளுக்கு இடையேயான போட்டி முடிந்ததைத் தொடர்ந்து திங்கட்கிழமை இந்தியாவுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. எனவே வீரர்கள் கோஹ்லியுடனான சந்திப்பிற்கு தயாராக இருந்தனர்.

**2 மணி நேரம்....**

இந்தச் சந்திப்பில் வரவிருக்கும் தொடர் பற்றிய பேச்சுவார்த்தைகள் முதல் கில் மற்றும் பண்ட் இளம் அணியை எவ்வாறு அணிதிரட்ட முடியும் என்பது வரை விவாதம் நடைபெற்றது என்றும், இந்த விவாதம் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது எனவும் தெரிகிறது. இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வரும் 20-ம் தேதி லீட்சில் தொடங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# பந்தை சேதப்படுத்திய விவகாரம்: ஆதாரம் கேட்கிறது டி.என்.பி.எல்.

**சேலம், ஜூன் 18-**

டி.என்.பி.எல். தொடரில் கடந்த 14-ம் தேதி சேலத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் திண்டுக்கல் டிராகன்ஸ் - மதுரை பேந்தர்ஸ் அணிகள் மோதின. இதில் 151 ரன்கள் இலக்கை துரத்திய திண்டுக்கல் டிராகன்ஸ் அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



**புகார்...**

இந்நிலையில் இந்த ஆட்டத்தின் போது திண்டுக்கல் டிராகன்ஸ் அணியினர் பந்தை சேதப்படுத்தியதாக மதுரை பேந்தர்ஸ் சார்பில் டி.என்.பி.எல். நிர்வாகத்திடம் புகார் அளிக்கப்பட்டது. பந்தை உலரச் செய்வதற்கு வழங்கப்படும் துண்டுகளில் வேதியல் திரவத்தை பயன்படுத்தி பந்து சேதப்படுத்தப்பட்டதாக அந்த அணி தரப்பில் கூறப்பட்டது.

**ஆதாரமும் இல்லை...**

இந்நிலையில் திண்டுக்கல் அணி பந்தை சேதப்படுத்தியதற்கான எந்த ஆதாரமும் இல்லை. கேள்விக்குரிய துண்டுகள் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தால் வழங்கப்பட்டவை. இவை இரு அணிகளுக்கும் சமமாக வழங்கப்படுகின்றன. நடுவர்கள் மற்றும் விளையாட்டு கட்டுப்பாட்டு குழு போட்டி முழுவதும் பந்தை முழுமையாக மேற்பார்வையிட்டது.

**ஊகமாக உள்ளன...**

ஆட்டத்தின் போது எந்த கேள்வியும் எழுப்பப்படவில்லை. மேலும் குற்றச்சாட்டை சரிபார்க்கக்கூடிய எந்த ஆதாரமும் வழங்கப்படவில்லை. கூற்றுக்கள் ஊகமாக உள்ளன.

எனினும் புகார் கூறியுள்ள மதுரை அணி நம்பகமான மற்றும் சரிபார்க்கக்கூடிய ஆதாரங்களைக் கொண்டிருந்தால் சுயாதீன விசாரணை ஆணையத்தின் முன்பாக சமர்ப்பிக்கலாம் என்று டி.என்.பி.எல். நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## 5 பந்துகளில் 5 விக்கெட்டுகள்

இந்த ஐ.பி.எல். சீசனில் லக்னோ அணியில் ரூ.30 லட்சத்துக்கு வாங்கப்பட்ட திக்வேஷ் ரதி தனது சிறப்பான பந்து வீச்சினாலும் விக்கெட் எடுத்த பிறகு 'நோட்புக் செலிபிரேஷன்' எனும் அவரது கொண்டாட்டத்தினாலும் கவனம் ஈர்த்தார். தொடர்ச்சியாக இந்தக் கொண்டாட்டத்தினால் அபராதம் விதிக்கப்பட்டாலும் திக்வேஷ் அஞ்சாமல் அதைச் செய்து வந்தார். இந்தக் கொண்டாட்டத்தினால் தனது ஊதியத்தில் 30 சதவிகிதம் அபராதமாக செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

ஐ.பி.எல். சீசனில் 13 போட்டிகளில் 14 விக்கெட்டுகள் எடுத்த திக்வேஷ் ரதி 8.25 எகானமியுடன் பந்துவீசினார். உள்ளூர் டி20 போட்டியில் திக்வேஷ் ரதி எடுத்த 5 விக்கெட்டுகள் வீடியோவை லக்னோ அணி உரிமையாளர் சஞ்சீவ் கோயங்கா தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். கடந்த பிப்ரவரி 2025இல் உள்ளூர் போட்டியில் 28 ரன்கள் கொடுத்து 7 விக்கெட்டுகள் எடுத்து அசத்தியிருந்தார். உள்ளூர் டி20 போட்டியில் திக்வேஷ் ரதி 5 பந்துகளுக்கும் 5 விக்கெட்டுகள் எடுத்த இந்த வீடியோவை பார்த்து வியந்தேன். ஐ.பி.எல். 2025-இல் லக்னோ அணியில் நட்சத்திரமாக மாறுவதற்கான சிறிய முன்னோட்டம்தான் இந்த வீடியோ என்றார்.

## ஒரே ஆட்டத்தில் 3 சூப்பர் ஓவர்கள்

நெதர்லாந்து மற்றும் நேபாளம் அணிகள் மோதிய டி20 போட்டியில் டாஸ் வென்ற நேபாளம் அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த நெதர்லாந்து அணி 7 விக்கெட் இழப்பிற்கு 152 ரன்களை அடித்தது. இதனையடுத்து 153 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நேபாளம் அணி 8 விக்கெட் இழப்பிற்கு 152 ரன்களை அடித்தது. ஆட்டம் சமனில் முடிந்ததால் சூப்பர் ஓவர் நடத்தப்பட்டது.

முதல் சூப்பர் ஓவரில் 2 அணிகளும் தலா 19 ரன்கள் அடிக்க இரண்டாவது சூப்பர் ஓவர் நடத்தப்பட்டது. அந்த சூப்பர் ஓவரில் இரு அணிகளும் 17 ரன்களை அடித்தது. இதனால் 3 ஆவது சூப்பர் ஓவருக்கு ஆட்டம் நகர்ந்தது. அதில் நேபாளம் அணி முதல் 4 பந்துகளை சந்தித்து ரன் எதுவும் எடுக்காமல் 2 விக்கெட்டுகளை பறிகொடுத்தது. பின்னர் களமிறங்கிய நெதர்லாந்து அணி முதல் பந்திலேயே சிக்ஸ் அடித்து வெற்றி பெற்றது.

## சென்னையில் டென்னிஸ் தொடர்

250 சர்வதேச புள்ளிகளை கொண்ட டபிள்யூ.டி.ஏ. மகளிர் டென்னிஸ் தொடர் வரும் அக்டோபரில் சென்னையில் 2 கட்டங்களாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என உலக டென்னிஸ் சங்கம் அறிவித்துள்ளது. அதன்படி நடப்பாண்டு அக்டோபர் மாதம் 27 ஆம் தேதி டபிள்யூ.டி.ஏ. 250 மகளிர் டென்னிஸ் தொடர் சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள டென்னிஸ் ஸ்டேடியத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு சென்னையில் டபிள்யூ.டி.ஏ. 250 டென்னிஸ் போட்டிகள் நடைபெற்ற நிலையில் அதன் பின்னர் சுமார் 3 ஆண்டுகளுக்குப் பின்னர் சென்னையில் டபிள்யூ.டி.ஏ. 250 டென்னிஸ் தொடர் போட்டிகள் மீண்டும் நடைபெற உள்ளன.

## பி.எஸ்.ஜி. அணி அபாரம்

கிளப் அணிகளுக்கான 21-வது உலகக் கோப்பை கால்பந்து போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதில் 'சி' பிரிவில் நடந்த ஆட்டத்தில் பேயர்ன் முனிச் (ஜெர்மனி) அணி 10-0 என்ற கோல் கணக்கில் ஆக்லாந்து சிட்டியை (நியூசிலாந்து) துவம்சம் செய்தது. ஜமால் முசியாலா 3 கோலும், தாமஸ் முல்லர், ஒலிசி, கோமன் தலா 2 கோலும் அடித்தனர்.

'பி' பிரிவில் நடந்த ஆட்டம் ஒன்றில் பிரான்சை சேர்ந்த பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் (பி.எஸ்.ஜி.) அணி 4-0 என்ற கோல் கணக்கில் அட்லெட்டிகோ மாட்ரிட்டை (ஸ்பெயின்) தோற்கடித்தது. இதே பிரிவில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் போடாபோகோ (பிரேசில்) அணி 2-1 என்ற கோல் கணக்கில் சியட்டி சவுன்டெர்ஸ் எப்..சி.யை (அமெரிக்கா) வீழ்த்தியது. 'ஏ' பிரிவில் பால்மிராஸ் (பிரேசில்)- எப்.சி.போர்டோ (போர்ச்சுகல்) இடையிலான ஆட்டம் கோலின்றி டிராவில் முடிந்தது.

## மேத்யூஸ்க்கு கார்டு ஆப் ஹானர்ஸ்



வங்கதேச அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும் இலங்கை வீரர் ஏஞ்சலோ மேத்யூஸ்க்கு சக வீரர்கள் கார்டு ஆப் ஹானர்ஸ் கொடுத்து மரியாதை செலுத்தினர். இவர் 118 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி (சராசரி: 45), 16 சதங்களுடன் 8,167 ரன்கள் விளாசியுள்ளார். 226 ஒருநாள் போட்டிகள், 5,916 ரன்கள் (சராசரி: 40), 3 சதங்கள் விளாசினார். பந்து வீச்சில் 120 விக்கெட்டுகளை கைப்பற்றினார். மேலும் 90 டி20 போட்டிகளில் 1,416 ரன்கள் எடுத்துள்ளார். இதில் 6 அரைசதங்கள் அடங்கும்.

2014 டி20 உலகக் கோப்பையில் இலங்கை அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றினார். மேலும் 2011 ஒருநாள் உலகக் கோப்பை இறுதிப்போட்டி மற்றும் 2009, 2012 டி20 உலகக் கோப்பை இறுதிப்போட்டிகளில் இலங்கை அணியின் வீரராக மேத்யூஸ் இருந்தார். 2010-ம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் லசித் மாலிங்காவுடன் இணைந்து 9-வது விக்கெட் பார்ட்னர்ஷிப்பில் 132 ரன்கள் என்ற உலக சாதனையை படைத்தார். 2014 ஆசியக் கோப்பையை இலங்கை அணி மேத்யூஸ் தலைமையில் கைப்பற்றியது.

# கைதான ஏ.டி.ஜி.பி. ஜெயராமிடம் 20 மணி நேர விசாரணை நிறைவு

**சென்னை, ஜூன் 18-**

சிறுவன் கடத்தல் வழக்கில் ஏ.டி.ஜி.பி. ஜெயராமிடம் திருவாலங்காடு காவல் நிலையத்தில் வைத்து சுமார் 20 மணி நேரம் விசாரணை நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டம் திருவாலங்காட்டில் காதல் திருமண விவகாரத்தில் திருமணம் செய்து கொண்ட இளைஞரின் சகோதரரான 15 வயது சிறுவனை கடத்திய வழக்கில் புரட்சி பாரதம் கட்சித் தலைவரும் எம்.எல்.ஏ.வுமான ஜெகன் மூர்த்திக்கு தொடர்பு உள்ளதாக புகார் எழுந்தது.

இதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் வழக்கின் விசாரணையில், இந்த கடத்தல் வழக்கில் ஆயுதப்படை ஏ.டி.ஜி.பி. எச்.எம்.ஜெயராமுக்கு தொடர்பு இருந்ததாக அரசு தரப்பு வழக்கறிஞர் கூறியதையடுத்து அவரை கைது செய்ய சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. நீதிமன்ற உத்தரவுப்படி, ஆயுதப்படை ஏ.டி.ஜி.பி. எச்.எம். ஜெயராம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

திருவாலங்காடு காவல் நிலையத்தில் நேற்று ஏ.டி.ஜி.பி. ஜெயராமிடம் விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. நேற்று முன்தினம் மாலை தொடர்ந்த விசாரணை நேற்று மாலை வரை நடைபெற்றது. சுமார் 20 மணி நேரம் விசாரணை நடைபெற்றதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக இந்த வழக்கில் தொடர்புடைய எம்.எல்.ஏ. பூவை ஜெகன்மூர்த்தியிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. இதனிடையே ஜெயராமை பணியிடை நீக்கம் செய்து தமிழக உள்துறை செயலாளர் நேற்று காலை உத்தரவிட்டார்.

தன்னை கைது செய்ததற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் ஏ.டி.ஜி.பி. ஜெயராம் தாக்கல் செய்துள்ள மனு இன்று (ஜூன் 18) விசாரணைக்கு வரவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பஹல்காம் தாக்குதலுக்கு பிறகு
# ஜம்மு காஷ்மீரில் சுற்றுலா தலங்கள் மீண்டும் திறப்பு

**ஸ்ரீநகர், ஜூன் 18-**

பஹல்காம் தாக்குதலுக்கு பிறகு ஜம்மு காஷ்மீரில் 16 சுற்றுலா தலங்கள் மீண்டும் திறக்கப்பட்டன.

ஜம்மு காஷ்மீரின் பஹல்கம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22-ம் தேதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். இதையடுத்து, மாநிலம் முழுவதும் உள்ள சுற்றுலா தலங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தற்காலிகமாக மூடப்பட்டன. இதனால் சுற்றுலா துறை கடுமையாக பாதிக்கப்பட்டது. வைஷ்ணவ தேவி கோவிலுக்கான ஆன்மிக யாத்திரையும் பாதிக்கப்பட்டது.

இதையடுத்து, சுற்றுலா துறைக்கு புத்துயிர் அளிக்கவும் சுற்றுலா பயணிகள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தவும் ஜம்மு காஷ்மீர் அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, உமர் அப்துல்லா கடந்த மாதம் அமைச்சரவை கூட்டத்தை பஹல்காம் பகுதியில் நடத்தினார். அப்போது, சுற்றுலா தலங்களை மீண்டும் திறக்க வேண்டும் என மந்திரி சபை அழைப்பு விடுத்திருந்தது.

துணைநிலை கவர்னர் மனோஜ் சின்ஹா தனது எக்ஸ்தள பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'காஷ்மீர் மற்றும் ஜம்மு பிராந்தியத்தில் உள்ள சில சுற்றுலா தலங்களை மீண்டும் திறக்க உத்தரவிட்டுள்ளேன். பஹல்காமில் உள்ள பெடாப் பள்ளத்தாக்கு மற்றும் பூங்காக்கள், வெரினாக் தோட்டம், கோகெர்னாக் தோட்டம் மற்றும் அச்சபால் தோட்டம் ஆகியவை நேற்று திறக்கப்படும்' என தெரிவித்தார். இதன்படி, பஹல்காம் உள்பட 16 சுற்றுலா தலங்கள் நேற்று திறக்கப்பட்டன. ஜம்மு-காஷ்மீரில் உள்ள 48 சுற்றுலா தலங்களில் பஹல்காம் உள்ளிட்ட 16 சுற்றுலா தலங்கள் மட்டும் முதல் கட்டமாக திறக்கப்பட்டுள்ளது.

## அகமதாபாத் விமான விபத்து:
# இதுவரை டி.என்.ஏ. மூலம் 144 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டன

அகமதாபாத், ஜூன் 18-

அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்த 144 பேரின் உடல்கள் டி.என்.ஏ. மூலம் உறுதி செய்யப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து லண்டனுக்கு புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் புறப்பட்ட சில நிமிடங்களிலேயே கீழே விழுந்து தீப்பற்றி எரிந்து உருக்குலைந்தது. விமானத்தில் பயணித்த 241 பேர் உயிரிழந்தனர். இதில் குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியும் (வயது 68) பலியானார்.

உயிரிழந்தவர்களின் உடல்களில் பல அடையாளம் காண முடியாத அளவுக்கு உருக்குலைந்ததால், டி.என்.ஏ. சோதனை மூலம் அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை 135 பேரின் டி.என்.ஏ. மாதிரிகள் அவர்களது உறவினர்களுடன் பொருந்தியுள்ளன. அவற்றில் 101 பயணிகளின் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்கள் குஜராத், மராட்டியம், பீகார், ராஜஸ்தான் மற்றும் டையூவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

இந்தநிலையில், குஜராத்தின் அகமதாபாத்தில் நிகழ்ந்த ஏர் இந்தியா விமான விபத்தில் பலியான 144 பேரின் டி.என்.ஏ மாதிரிகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக குஜராத் உள்துறை அமைச்சர் ஹர்ஷ் சங்கவி உறுதிப்படுத்தி உள்ளார்.

# கோலிக்கு எதிராக பந்துவீசும் போது சிரமத்தை சந்தித்தேன்: ஆண்டர்சன்

**லண்டன், ஜூன் 18-**

டெஸ்ட் போட்டிகளில் சச்சின் தெண்டுல்கரை விட விராட் கோலிக்கு எதிராக பந்துவீசும்போது சிரமத்தை சந்தித்ததாக ஜேம்ஸ் ஆண்டர்சன் தெரிவித்துள்ளார்.

**704 விக்கெட்டுகள்...**

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் ஆண்டர்சன் டெஸ்ட் கிரிக்கெட்டில் மட்டும் 704 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். அவர் விளையாடிய கால கட்டத்தில் எதிரணி பேட்ஸ்மேன்களுக்கு தனது பந்துவீச்சு மூலம் கடும் நெருக்கடி கொடுத்து இங்கிலாந்து அணியின் பல வெற்றிகளுக்கு காரணமாக அமைந்துள்ளார்.

**யாருக்கு கடினம்...**

இந்திய அணியின் ஜாம்பவான் பேட்ஸ்மேன்களான சச்சின் தெண்டுல்கரை 9 முறையும், விராட் கோலியை 7 முறையும் டெஸ்ட் போட்டிகளில் அவர் அவுட்டாக்கியுள்ளார். இந்நிலையில் சமீபத்திய பேட்டி ஒன்றில் சச்சின் மற்றும் விராட் கோலி இருவரில் யாருக்கு பந்துவீசுவது கடினம்? என்பது குறித்து ஜேம்ஸ் ஆண்டர்சன் கருத்து தெரிவித்துள்ளார்.

**சவாலான ஒன்று...**

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு:- "டெஸ்ட் போட்டிகளில் சச்சின் தெண்டுல்கரை விட விராட் கோலிக்கு எதிராக பந்துவீசும் போது நான் சிரமத்தை சந்தித்துள்ளேன். சச்சின், விராட் கோலி என இருவரையுமே நான் பலமுறை வீழ்த்தி இருந்தாலும் விராட் கோலியின் விக்கெட்டை வீழ்த்துவது என்பது சவாலான ஒன்று.

**வேறு ஒரு வீரராக...**

கோலி முதல் முறையாக இங்கிலாந்துக்கு வந்தபோது (2014-ம் ஆண்டு) அவருக்கு எதிராக நான் ஆதிக்கம் செலுத்தினேன். ஆப் ஸ்டம்புக்கு வெளியே அவரது பலவீனத்தை நான் பயன்படுத்திக் கொண்டேன். ஆனால் அடுத்த முறை நான் அவருக்கு எதிராக விளையாடிய போது (2018-ம் ஆண்டு) வேறு ஒரு வீரருக்கு பந்து வீசுவது போல இருந்தது. அந்த அளவுக்கு என் மீது ஆதிக்கம் செலுத்தினார். சச்சினுக்கு எதிராக அந்த மாதிரியான மாற்றம் இருந்ததை நான் உணரவில்லை. கோலியைப் பொறுத்தவரை, நிச்சயமாக இருந்தது. பந்துவீச மிகவும் கடினமான வீரராக கோலியை நான் கண்டேன்" என்று கூறினார்.

# ராமநாதபுரம் மாவட்டம் கலெக்டர் தலைமையில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை வழங்கல்



ராமநாதபுரம், ஜூன் 18-

18 வயதிற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு வயது வரம்பை தளர்த்தி உதவித்தொகை வழங்குவதற்கான சிறப்பு முகாம் ராமநாதபுரத்தில் கலெக்டர் தலைமையில் நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் 18 வயதுக்குட்பட்ட மாற்றுத்திறனாளி உதவித்தொகை வழங்கக்கோரி மனு செய்துள்ள மனுதாரர்களுக்கு வயதை தளர்த்தி மாற்றுத்திறனாளி உதவித்தொகை வழங்குவதற்கான குழுக்கூட்டம் மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் தலைமையில், மருத்துவக்குழுவினர் முன்னிலையில் நடைபெற்றது.

இம்முகாமில் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், மனவளர்ச்சி குன்றியோர், காதுகேளாதோர், கண் பார்வையற்றோர் பங்கேற்றனர். மருத்துவர் குழுவைச்சேர்ந்த மருத்துவர்கள் அவர்களை ஆய்வு மேற்கொண்டதுடன் இக்குழுவானது 32 நபர்களுக்கு வருவாய்த்துறை மூலம் மாற்றுத்திறனாளி உதவித்தொகை பெறுவதற்கு பரிந்துரை செய்தது. இக்கூட்டத்தில் மாவட்ட சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் கிருஷ்ணகுமாரி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் பாலகந்தரம், எலும்பு முறிவு மருத்துவர் அழகுகார்த்திகேயன், காது மற்றும் மூக்கு, தொண்டை மருத்துவர் அருண்ராஜ், கண் மருத்துவர் ஆனந்த், மன நல மருத்துவர் பாரதி, சமூக பாதுகாப்புத்திட்ட வட்டாட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ராமேஸ்வரம் கோவிலில் உள்ளூர் மக்கள் தரிசனம் செய்ய கட்டுப்பாடு

## போராட்டத்தில் குதித்த பொதுமக்கள்



ராமேசுவரம், ஜூன் 18

ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலில் ஆண்டாண்டு காலமாக இருந்து வந்த நடைமுறையை மாற்றி, உள்ளூர் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய கட்டுப்பாடுகள் விதித்ததால், அறநிலையத்துறையை கண்டித்து மக்கள் ஆலய நுழைவு போராட்டம் நேற்று நடைபெற்றது.

ராமாயண தொடர்புடைய ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவில் தீர்த்தம் - மூர்த்தி - தலம் என மூன்று வகையாலும் சிறப்பு பெற்றது. சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் ராமேஸ்வரம் வரும் பக்தர்கள் பாம்பன் கால்வாயினை கடப்பதற்கு ராமநாதபுரம் மன்னர் விஜய ரகுநாத சேதுபதியால் இலவச படகு பயணம் நடத்தப்பட்டது.இதனை கண்காணிக்க மன்னரின் மகளான சீனி நாச்சியார், லெட்சுமி நாச்சியார் ஆகியோரின் கணவரான தண்டத்தேவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

வட மாநிலத்தை சேர்ந்த சன்னியாசியான பைராகி என்பவரிடம் படகிற்கு கட்டணம் கேட்டதால், தண்டத்தேவர் மன்னரால் சிரச்சேதம் செய்யப்பட்டார். அத்தகைய வரலாறு கொண்ட ராமேஸ்வரம் கோவிலில் உள்ளூர் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் உள்ளூர் மக்கள் இன்று பெருந்திரள் ஆலய நுழைவு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உள்ளூரை சேர்ந்த மக்கள் பிறப்பு முதல் இறப்பு வரை ராமநாதசுவாமியை தங்கள் குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர். இறந்தவர்களின் உடல் இக்கோவிலின் கோடி தீர்த்தம் தெளிக்கப்பட்ட பின்னரே அடக்கம் செய்யப்படுகின்றன. அதனை கூட உரிய நேரத்தில் வாங்கி வர கோவிலுக்குள் எளிதாக செல்ல முடியவில்லை. உள்ளூர் மக்கள் 90% பேர் தங்கள் திருமணங்களை இக்கோவிலிலேயே நடத்தி வருகின்றனர்.திருமணம் முடிந்தவுடன் சுவாமி - அம்மனை வழிபட்ட பின்னர்தான் வீட்டிற்கு செல்வர். இவை தவிர பிறந்த நாள் மற்றும் விசேஷ நாட்களில் உள்ளூர் மக்கள் பெருமளவில் சாமி தரிசனம் செய்ய செல்கின்றனர். அவர்கள் சன்னிதியின் சிறப்பு வழியில் சென்று காலங்காலமாக தரிசனம் செய்தனர். கோவிலுக்கு வரும் முக்கிய பிரமுகர்களும் இதே வழியில்தான் தரிசனத்திற்கு செல்கின்றனர்.

இந்நிலையில் இந்த சிறப்பு வழியில் உள்ளூர் மக்களை தரிசனத்திற்கு செல்ல தடை விதித்து இடையூறு ஏற்படுத்தியுள்ளனர் அறநிலையத்துறை. இதற்கு மாற்றாக நெரிசல் மிகுந்த கட்டண தரிசன வழியில் செல்ல கோவில் அதிகாரிகள் வற்புறுத்துகின்றனர். தரிசனத்திற்காக நாள்களை ஒதுக்கி ராமேஸ்வரம் வரும் பக்தர்களையும், சாமி தரிசனம் செய்துவிட்டு தங்கள் பணிகளை துவங்கும் உள்ளூர் மக்களையும் ஒரே வரிசையில் செல்ல கூறுவதன் மூலம் காலவிரயம் உள்ளிட்ட இடையூறுகள் ஏற்படுகின்றன. இவை தவிர கோவிலின் பிரதான நுழைவு வாயில் துவங்கி சாமி, அம்மன் சன்னதி வரை கம்பி தடுப்புகள் ஏற்படுத்தியுள்ளனர்.

இதனால் கோவிலுக்குள் உள்ள காசி விஸ்வநாதர், விசாலாட்சி, தட்சிணாமூர்த்தி, மகாலட்சுமி, நடராஜர், கால பைரவர் உள்ளிட்ட சன்னிதிகளுக்கு செல்ல முடியாத நிலை உள்ளது. மேலும் கோவிலுக்கு செல்லும் பக்தர்கள் கோவிலின் பிரகாரத்தை சுற்றி வந்த பின்னரே தங்கள் வழிபாட்டை நிறைவு செய்வர்.ஆனால் தேவஸ்தான நிர்வாகத்தினர் ஏற்படுத்தியுள்ள தடுப்புகள் காரணமாக கோவிலின் அடையாளமாக விளங்கும் உலக புகழ்பெற்ற மூன்றாம் பிரகாரம் உள்ளிட்ட எந்த பிரகாரத்தையும் சுற்றி வர முடியாத நிலை உள்ளது. இத்தகைய தடைகளால் அம்மன் சன்னிதியில் வழக்கமாக நடந்து வந்த திருமண நிகழ்வுகளை கூட உள்ளூர் மக்களால் நடத்த முடியவில்லை.

இத்தகைய பாரம்பரிய உரிமையை பறிக்கும் கோவில் நிர்வாகத்தின் போக்கினை கைவிட கோரி இன்று காலை உள்ளூரில் உள்ள சர்வ கட்சியினர், அனைத்து சமூகத்தினர் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் காலை கோவிலின் மேற்கு கோபுர வாசலில் குவிந்தனர்.திட்டமிட்ட சந்திப்பில் இருந்து ஊர்வலமாக வந்த இவர்கள் கோவிலுக்குள் செல்ல முடியாமல் போலீஸார் தடுப்புகளை ஏற்படுத்தியிருந்தனர். இதனால் போலீஸார் பொதுமக்கள் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

தடைகளை தாண்டி செல்ல முயன்ற பொதுமக்களை அப்பகுதியில் குவிக்கப்பட்டிருந்த போலீஸார் சுற்றி வளைத்து கைது செய்தனர். போலீஸ் வேனில் ஏற மறுத்து போராடியவர்களை போலீஸார் குண்டுகட்டாக தூக்கி வேனில் ஏற்றினர்.இதனால் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக அப்பகுதியில் பரபரப்பு நிலவியது. இதனை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 35 பெண்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர். இந்த போராட்டத்தினால் நடுத்தெரு மற்றும் கோவில் ரதவீதி பகுதிகளில் வாகன போக்குவரத்து நிறுத்தப்பட்டு மாற்று வழிகளில் வாகனங்கள் திருப்பி விடப்பட்டன.

# கமுதியில் இன்று மின்தடை

கமுதி, ஜூன் 18-

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அதன் சுற்று வட்டார பகுதிகளில் பராமரிப்பு பணி காரணமாக புதன்கிழமை இன்று மின்விநியோகம் நிறுத்தப்படவுள்ளது.


இதுகுறித்து கமுதி மின்வாரிய உதவி செயற்பொறியாளர் செந்தில்குமார் (பொறுப்பு) வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியது. கமுதி துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவுள்ளதால் புதன்கிழமை ஜூன் 18 இன்று காலை 10 மணி முதல் 5 மணி வரை கமுதி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான அபிராமம், முதுகுளத்தூர், பார்த்திபனூர், கமுதி நகர், செங்கப்படை, த.புனவாசல், பேரையூர், மண்டலமாணிக்கம், கீழராமநதி, பசும்பொன் ஆகிய இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும் என தெரிவித்துள்ளார்.

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர்

# எடப்பாடி பழனிச்சாமி மீண்டும் முதல்வராக வேண்டி முன்னாள் அமைச்சர் தியானம்

விருதுநகர், ஜூன் 18-

வத்திராயிருப்பு அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் தாணிப்பாறை பகுதியில் அமைந்துள்ளது சர்வேஸ்வரர் கோயில் மற்றும் தியான நிலையம். இந்த கோயிலில் 18 சித்தர்கள் மற்றும் விநாயகர், வராகி அம்மன், பைரவர், கருப்பசாமி, தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட சுவாமிகள் அமைந்துள்ளது. இந்த கோயிலுக்கு சென்று வழிபட்டால் நினைத்த காரியங்கள் நடக்கும் என்பது ஐதீகம்.



இந்த நிலையில் 2026 சட்டமன்ற தேர்தலில் அதிமுக வெற்றி பெற்று ஆட்சி அமைக்கவும், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி மீண்டும் முதல்வராக வேண்டியும் அதிமுக முன்னாள் அமைச்சரும், விருதுநகர் மேற்கு மாவட்ட செயலாளருமான ராஜேந்திரபாலாஜி இரவு 10.30 மணியளவில் ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட்டார். பின்பு கோயிலில் சிறப்பு சாமி தரிசனம் மேற்கொண்டார். இந்த நிகழ்வில் அதிமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ராமர் பாலம், சரஸ்வதி நதி குறித்து வரலாற்று சான்று உள்ளதா?

## கரூர் எம்.பி. ஜோதிமணி கேள்வி

திண்டுக்கல், ஜூன் 18-

ராமர் பாலம், சரஸ்வதி நதி ஆகியவை குறித்த அறிவியல் சான்று, வரலாற்று சான்று உள்ளதா? இவர்கள் அரசியல் காரணங்களுக்காக வாயில் வந்ததையெல்லாம் சொன்னால் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், தமிழுக்கு இருக்கும் தொன்மையை இவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்'' என கரூர் எம்.பி. ஜோதிமணி தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியை சேர்ந்த கரூர் எம்.பி. ஜோதிமணி திண்டுக்கல்லில் செய்தியாளர்களிடம் கூறியது: ''கீழடியில் எப்பொழுதெல்லாம் நமது தொன்மை அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்படுகிறதோ, அப்போதெல்லாம் மத்திய அரசு, இது சரியில்லை, அது சரியில்லை, அறிவியல் பூர்வ ஆராய்ச்சி இல்லை என்கின்றனர். இரும்பை பயன்படுத்தியதில் தமிழர்கள் தான் முதன்மையானவர்கள் என நிரூபித்துள்ளோம். கீழடி ஆராய்ச்சி துவக்கத்தில் நமது தொன்மைக்கு சான்று கிடைக்கும்போது, அமர்நாத்ராமகிருஷ்ணன் இடம்மாற்றம் செய்யப்பட்டார். ஆராய்ச்சிக்கான நிதி நிறுத்தப்பட்டது. தற்போது அறிக்கையை மாற்றி எழுத சொல்கிறார்கள். உண்மையை மாற்ற முடியாது என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

ராமர் பாலம், சரஸ்வதி நதி ஆகியவை குறித்த அறிவியல் சான்று, வரலாற்றுச் சான்று உள்ளதா? இவர்கள் அரசியல் காரணங்களுக்காக வாயில் வந்ததையெல்லாம் சொன்னால் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால், தமிழுக்கு இருக்கும் தொன்மையை இவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். தமிழ்நாட்டு மக்களின் ஓட்டு வேண்டும். தமிழ் மொழியோ, தமிழ் இனமோ உலகின் தொன்மையானது என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இதில் இருந்து தமிழர்களின் மனநிலைக்கு எதிரான மனநிலையை கொண்டது பாஜக என்பது நிரூபணமாகிறது.

இதுதான் கீழடி விவகாரத்தில் எதிரொலிக்கிறது. மத்திய அரசு ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் தமிழ் இனம், மொழி தொன்மையானதுதான். அவர்களிடம் நாம் ஒன்றும் சான்றிதழ் எதிர்பார்த்துக் காத்திருக்கவில்லை. இந்தியாவில் ஓர் இனம் உலகின் தொன்மையானது என்று சொல்லும்போது இந்தியர்கள் அனைவரும் கொண்டாடவேண்டும். தமிழ் இனமோ, மொழியோ இந்தியாவுடைய ஓர் அம்சம் என ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். கேட்டால் நம்மை பிரிவினைவாதி என்கின்றனர்.

தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் வேலை அட்டை உள்ள அனைவருக்கும் வேலை தர இரண்டு லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாய் பணம் ஒதுக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டு 67 ஆயிரம் கோடி மட்டுமே ஒதுக்கியுள்ளனர். இதில் 23 ஆயிரம் கோடி ரூபாய் கடந்த ஆண்டுக்கான நிலுவை தொகை. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை நிறுத்த மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அரசியல் காழ்புணர்ச்சி காரணமாக, காங்கிரஸ் கொண்டுவந்த திட்டம் என்பதால் இந்த திட்டத்தை முடக்கப் பார்க்கின்றனர்'' என்றார்.

## நத்தம் அருகே

# ரியல் எஸ்டேட் அதிபர் வீட்டில் புகுந்த முகமூடி கொள்ளையர்கள்

நத்தம், ஜூன் 18-

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சமுத்திரா பட்டியை சேர்ந்தவர் அழகப்பன் (47). ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். இவர் சிறுகுடி செல்லும் சாலையில் ஊரணிக்கரை பகுதியில் உள்ள வீட்டில் தனது தாய் சொர்ணத்துடன் (70) வசித்து வருகிறார்.



இந்நிலையில் நேற்று இரவு இவரது வீட்டின் கதவை தட்டும் சத்தம் கேட்டது. இதைப் பார்த்த அழகப்பன் கதவை திறந்தார். அப்போது முகமூடி அணிந்து வந்த 6 பேர் அழகப்பனின் கழுத்தில் கத்தியை வைத்து வீட்டிற்குள் அழைத்து சென்றனர்.

பின்னர் அவர்கள் அழகப்பனிடம் பணத்தை எங்கு வைத்திருக்கிறாய் என்று கேட்டு பீரோவை திறக்க சொல்லியுள்ளனர். இதில் பயந்து போய் பீரோவை அழகப்பன் திறந்துள்ளார். ஆனால் பீரோவில் நகை, பணம் எதுவும் இல்லை. இதனால் ஆத்திரமடைந்த முகமூடி கொள்ளையர்கள் தாங்கள் வைத்திருந்த கத்தியால் கழுத்து, கை,கால்களில் சராமரியாக குத்தியுள்ளனர்.இதில் அழகப்பன் வலி தாங்க முடியாமல் அலறியுள்ளார்.

தன் மகனின் அலறல் சத்தம் கேட்டு மாடியில் இருந்த அவரது தாயார் சொர்ணம் யாராவது காப்பத்துங்கள் என கூச்சலிட்டுள்ளார். இதைப் பார்த்த முகமூடி கொள்ளையர்கள் சொர்ணத்தை மாடியில் இருந்து கீழே தரதரவென இழுத்து வந்து தாக்கியுள்ளார். இதனிடையே அலறல் சத்தம் கேட்டு கிராம மக்கள் வர கொள்ளையர்கள் பின்பக்க வழியாக தப்பியோடி விட்டனர். இதில் ஒருவரை பிடித்த பொதுமக்கள் தர்ம அடி கொடுத்து அவனை போலீசில் ஒப்படைத்தனர்.

ஆனால் கண் இமைக்கும் நேரத்தில் போலீசை ஏமாற்றி தப்பியோடிவிட்டான். இதில் பலத்த காயமடைந்த அழகப்பன் நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இச்சம்பவம் குறித்து தகவலறிந்து சென்ற மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பிரதீப், நத்தம் போலீஸ்- இன்ஸ்பெக்டர் சிவராமகிருஷ்ணன், சப் -இன்ஸ்பெக்டர் தர்மர் உள்ளிட்ட போலீசார்கள் சம்பவ இடத்தில் நேரில் விசாரணை நடத்தினர். மேலும் இச்சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து தப்பியோடிய முகமூடி கொள்ளையர்களை தேடி வருகின்றனர்.



**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று பெரியகுளம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மாணவர் விடுதியில் சமையல் கூடத்தில் உணவு தயாரிக்க உள்ள வசதிகளை பார்வையிட்டு, உணவு வகைகளை ருசி பார்த்தார். இந்நிகழ்வில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பெரியசாமி, பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் ராமகிருஷ்ணன், மகாராஜன், சரவணக்குமார், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், உள்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.**

# திருமங்கலம்-கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் இணைப்பு பாதை அடைக்கப்பட்டதால் விபத்து



திருமங்கலம், ஜூன் 18-

திருமங்கலம்-கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் இருந்த இணைப்பு பாதை திடீரென அடைக்கப்பட்டதால் நீண்டதூரம் சுற்றிச் செல்வதை தவிர்த்து எதிரும் புதிருமாக செல்லும் வாகனங்களால் அங்கு விபத்துக்கள் ஏற்படும் அபாயம் நிலவுகிறது.

மதுரை-கன்னியாகுமரி மற்றும் திருமங்கலம்-கொல்லம் தேசிய நான்குவழி நெடுஞ்சாலைகள் திருமங்கலம் வழியாகச் செல்கின்றது.இதனிடையே பாதுகாப்பு என்ற பெயரில் மேற்கண்ட தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள இணைப்பு சாலை மற்றும் சாலை சந்திப்புகள் மூடப்பட்டு வருகிறது. இந்நிலையில் மதுரை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து கீழிறங்கி திருமங்கலம்-கொல்லம் தேசிய நெடுஞ்சாலை சேரும் இடத்தில் சாலையில் குறுக்கே பாதை அமைக்கப் பட்டு இருந்தது.

இந்த இணைப்பு சாலை வழியாக வரும் வாகனங்கள் அங்குள்ள பாதையை பயன்படுத்தி கொல்லம் நெடுஞ்சாலையில் பயணம் மேற்கொண்டு வந்தன.இந்த சூழலில் கொல்லம் நெடுஞ்சாலையின் குறுக்கே இருந்த பாதை முழுமையாக அடைக்கப்பட்டு தற்போது வாகனங்கள் அனைத்தும் திருமங்கலம் தீயணைப்பு நிலையம் வரை சென்று அங்குள்ள ரவுண்டானாவில் சுற்றி வருமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி மதுரை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து கீழிறங்கி இணைப்பு சாலை வழியாக வந்திடும் வாகனங்கள் நீண்ட தூரம் சென்று ரவுண்டானாவை சுற்றிச் சென்றிட மனமின்றி கொல்லம் சாலையின் வலதுபுறம் நுழைந்து அண்டர்பாஸ் சாலை வழியாக ஒருவழிப்பாதையில் எதிரும் புதிருமான செல்கின்றன.

இதனால் அவ்வழியாக அதிவேகமாக வரும் வாகனங்களால் இணைப்புச் சாலையிலிருந்து நுழைந்திடும் வாகனங்கள் மோதிக் கொள்ளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.எனவே விபத்துக்கள் அதிகம் ஏற்படும் தீயணைப்பு நிலைய ரவுண்டானா வழியை தவிர்த்து வழக்கம் போல் இணைப்பு சாலையின் எதிரில் இருந்த பாதையை போக்குவரத்திற்கு திறந்து விட்டு அந்த பகுதியில் தேவையான வேகத்தடுப்புகள்எச்சரிக்கை பலகைகள் அமைத்து விபத்துக்களை தவிர்த்திடலாம் என வாகனஓட்டிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மதுரை முருக பக்தர்கள் மாநாட்டிற்கான

# பாடலை நயினார் நாகேந்திரன் வெளியிட்டார்

மதுரை, ஜூன் 18-

முருக பக்தர்கள் மாநாட்டு ஆன்மிக பாடலை நயினார் நாகேந்திரன் வெளியிட்டார்.

மதுரையில் இந்து முன்னணி சார்பில் வருகிற 22-ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) பாண்டிக்கோவில் சாலையில் உள்ள அம்மா திடலில் முருக பக்தர்கள் மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் தமிழகம் மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களில் இருந்து அரசியல் தலைவர்கள், ஆன்மிகவாதிகள், ஆதீனங்கள் உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர்.

சிறப்பு விருந்தினர்களாக, உத்தரபிரதேச முதல்-மந்திரி யோகி ஆதித்யநாத், ஆந்திர துணை முதல்-மந்திரி பவன் கல்யாண் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசுகின்றனர்.

இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடந்து வருகிறது. அன்றைய தினத்தில் காவடி, பால்குடம், தேர் இழுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுபோல், மாலை 6 மணி அளவில் லட்சக்கணக்கானோர் ஒரே நேரத்தில் கந்த சஷ்டி கவசம் படித்து கின்னஸ் சாதனையும் படைக்க இருப்பதாக கூறப்படுகிறது. இந்த மாநாட்டு திடலில் அறுபடை முருகன் கோவில்களின் மாதிரி கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. அறுபடை வீடு கோபுர முகப்பும், உள்ளே சென்றால் கோவில் பிரகாரம் போன்றும், தனி சன்னதிகளில் வேல்களுடன், அறுபடை வீடு மூலவர்களை தத்ரூபமாக வடிவமைத்து பக்தர்கள் வழிபட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாநாடு நடைபெறும் 22-ந்தேதி இரவு வரை பொதுமக்கள் அனைவரும் அறுபடை வீடுகளின் மாதிரியை பார்வையிடலாம் என நிர்வாகிகள் தெரிவித்தனர்.




**மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் வீட்டு கதவு எண் மாற்றம் செய்ய வேண்டி விண்ணப்பித்த மனுதாரருக்கு உடனடியாக கதவு எண் மாற்றம் செய்யப்பட்டு அதற்கான அனுமதி ஆணையினை மனுதாரருக்கு மேயர் இந்திராணி பொன்வசந்த், ஆணையாளர் சித்ரா விஜயன், ஆகியோர் வழங்கினார்கள் அருகில் துணை மேயர் நாகராஜன், மண்டலத் தலைவர் வாசுகி, துணை ஆணையாளர் ஜெய்னுலாபுதீன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.**




● தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 2025-2026-ம் ஆண்டிற்கான சட்டக்கல்வி மாணவர் சேர்க்கை தரவரிசை பட்டியலின்படி மாணவர்களுக்கு ஒதுக்கீடு ஆணைகளை நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் வழங்கினார். இதில் டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பாரதிதாசன், பணிக்குழு உறுப்பினர் சி.ஜார்ஜ்அலெக்ஸ்சாண்டர், பல்கலைக்கழகத்தின் பதிவாளர் கௌரி, ஒருங்கிணைப்பாளர் ரஞ்சித் ஓமன் ஆபிரகாம் மற்றும் உறுப்பினர்கள் வி.பாலாஜி, எஸ்.கே.அசோக்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.




● சிவகங்கை மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் ரூ.33.23 கோடி மதிப்பீட்டிலான 36 முடிவுற்ற திட்ட பணிகளை திறந்து வைத்து ரூ.4.58 கோடி மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 1,512 பயனாளிகளுக்கு ரூ.24.24 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். இதில் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், எம்.எல்.ஏ.க்கள் ஆ.தமிழரசி, எஸ்.மாங்குடி, கலெக்டர் ஆஷாஅஜித், வருவாய் அலுவலர் எஸ்.செல்வசுரபி, திட்ட இயக்குநர் கா.வானதி உடனிருந்தனர்.




● ஜெர்மனி நாட்டிற்கு அரசு முறை பயணமாக சென்றுள்ள தமிழக குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் புகழ்பெற்ற போருஷியா டோர்ட்முண்ட் கால்பந்து கழகத்தை நேரில் சென்று பார்வையிட்டு கால்பந்து கழக ஒருங்கிணைப்பாளருடன் தமிழகத்தில் உலகத்தரத்திலான விளையாட்டு தொழில் வளர் மையத்தினை நிறுவுவதற்கான ஆலோசனை நடத்தினார்.




● சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில் உலக குருதி கொடையாளர் தினம் 2025 நிகழ்ச்சியில் வாழ்நாள் தன்னார்வ ரத்த கொடையாளர்களுக்கு விருதுகளை நேற்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். இந்நிகழ்வில் முதன்மைச்செயலாளர் ப.செந்தில்குமார், இயக்குநர் அருண்தம்புராஜ், மாநில குருதி பரிமாற்று குழுமம் திட்ட இயக்குநர் ஆர்.சீத்தாலட்சுமி, பொது சுகாதார இயக்குநர் செல்வவிநாயகம், ஆராயச்சி இயக்குநர் சங்குமணி கலந்து கொண்டனர்.



● விருதுநகரில் நவீன முறையில் நகர நில அளவை செய்யும் திட்டத்தை வருவாய் மற்றும் மேலாண்மைத்துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார். உடன் கலெக்டர் வீ.ப.ஜெயசீலன், அலுவலர்கள் உடனிருந்தனர்.

# இருப்பை காண்பித்து கொள்ள ஏதாவது சொல்வார்கள்: அமைச்சர் கே.என்.நேரு

நெல்லை, ஜூன் 18-

இருப்பை காண்பித்துக் கொள்வதற்காக எதிர்க்கட்சி தலைவரும், மற்ற எதிர்க்கட்சியினரும் ஏதாவது இது போல் சொல்லிக் கொண்டு தான் இருப்பார்கள் என்று அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

நெல்லையில் அமைச்சர் கே.என்.நேரு நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது, நயினார் நாகேந்திரன் புதிதாக தலைவராகி உள்ளார். தேர்தல் வருகிறது.

அதற்காக புதிது புதிதாக கண்டுபிடித்து விரதம் இருக்கிறார்.

தமிழ்நாடு மிக மிக பாதுகாப்பான மாநிலம். முதலமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறார். ஏ.டி.ஜி.பி. குறித்து புகார் வந்தபோது கூட முதலமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுத்தார். நயினார் நாகேந்திரன் ஏதாவது செய்து கொண்டிருப்பார்.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டக்காரர்களை எப்படி சுட்டார்கள் என்று அனைவருக்கும் தெரியும். ஒரு சில இடங்களில் ஒரு சிலர் செய்யும் செயல்களை தமிழ்நாடு முழுவதும் நடப்பதாக எடுத்துக் கொள்ள முடியாது. தமிழக முதலமைச்சர் சட்டம் ஒழுங்கு மற்றும் சாதி கலவரம் இல்லாத வகையில் உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறார்.

அனைவரையும் அழைத்துப் பேசி சிறப்பாக ஆட்சியை கொண்டு போய் கொண்டு இருக்கிறார். தேர்தல் வரும்போது தங்களது இருப்பை காண்பித்துக் கொள்வதற்காக எதிர்க்கட்சி தலைவரும், மற்ற எதிர்க்கட்சியினரும் ஏதாவது இது போல் சொல்லிக் கொண்டு தான் இருப்பார்கள்.

பா.ஜ.க. தேர்தலுக்கு அவர்கள் வேலையை செய்கிறார்கள். தி.மு.க. எங்கள் வேலையை செய்கிறோம். நாங்கள் பிடித்த இடங்களை விடுவோமா? விடமாட்டோம். கூடுதலான இடங்களை வெல்வதற்கு நாங்களும் முயற்சி எடுப்போம்.

வருகிற சட்டமன்ற தேர்தலில் பா.ஜ.க. எடுக்கும் முயற்சிகளை விட கூடுதலான முயற்சிகளை தி.மு.க. எடுக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து:

# துணை ஜனாதிபதியிடம் முதல்வர் ரங்கசாமி கோரிக்கை

புதுச்சேரி, ஜூன் 18-

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க ஆதரவு தரும்படி துணை ஜனாதிபதியிடம் புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி கோரிக்கை விடுத்தார்.

3 நாட்கள் பயணமாக துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் 3 நாட்களுக்கு முன் புதுச்சேரி வந்தார். அவர் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம், ஜிப்மர் மருத்துவக்கல்லூரியில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். இந்நிலையில், துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கரை புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி நேரில் சந்தித்தார். அப்போது, புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க ஆதரவு தரும்படி துணை ஜனாதிபதியிடம் புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி கோரிக்கை விடுத்தார். புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்கக்கோரி சட்டசபையில் அனைத்துக்கட்சிகளும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும்:

# தமிழக அரசுக்கு த.வெ.க. தலைவர் விஜய் கோரிக்கை

சென்னை, ஜூன் 18-

தமிழக அரசும் சாதிவாரி கணக்கெடுப்பு ஆய்வை நடத்த வேண்டும் என்று தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பது அனைத்துச் சமூக மக்களின் சமூக நீதிக்கான உரிமை முழக்கம். இந்தக் கோரிக்கையானது, இந்திய ஒன்றியமெங்கும் வலுவடைந்த காரணத்தால் மத்திய பா.ஜ.க. அரசு இறங்கி வந்து, நாடு முழுவதும் மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் சேர்ந்த சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படும் என அறிவித்தது.

தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கைப் பிரகடன முதல் மாநில மாநாட்டில் சமூக நீதிக்கான எங்களுடைய முழுமுதல் கோரிக்கையாக இந்தச் சாதிவாரிக் கணக்கெடுப்புக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டது. இதை மத்திய அரசு பல்வேறு அரசியல் காரணங்களுக்காக வேறு வழியின்றி ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இந்தச் சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்தும் மத்திய அரசு, மக்கள் தொகைக் கணக்கெடுப்போடு சேர்த்து, வெறும் கண்துடைப்பு சாதிவாரித் தலைக்கட்டுக் கணக்கெடுப்பாக நடத்தக் கூடாது; அனைத்து வகுப்பினருக்கும் இட ஒதுக்கீடு மற்றும் உள் ஒதுக்கீடு முறையாகக் கிடைக்கப் பெறும் வகையில் நடத்த வேண்டும்.

குறிப்பாக, மக்களவைத் தொகுதிகளுக்கான மறுசீரமைப்பை நோக்கமாகக் கொண்டு இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படக் கூடாது. மக்கள் தொகைக் கணக்கெடுப்போடு சேர்ந்த சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்திருந்தாலும், மாநில அரசும் சாதிவாரிக் கணக்கெடுப்பு ஆய்வை நடத்த வேண்டும். அண்டை மாநில அரசுகள் சில தங்களுக்கான அதிகாரங்களைப் பயன்படுத்தி, தன்னிச்சையாக சாதிவாரிக் கணக்கெடுப்பு ஆய்வு நடத்தியுள்ளன. எனவே, தமிழ்நாடு அரசும் சாதிவாரிக் கணக்கெடுப்பு ஆய்வு நடத்த வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சூதாட்ட செயலிகளை ஊக்குவிக்கும் விளம்பரங்கள்:

# யுவராஜ், ரெய்னா, ஹர்பஜனிடம் அமலாக்கத்துறை விசாரணை

புதுடில்லி, ஜூன் 18-

சூதாட்ட செயலிகளை ஊக்குவிக்கும் விளம்பரங்கள் தொடர்பாக முன்னாள் கிரிக்கெட் வீரர் கள் யுவராஜ்சிங், சுரேஷ் ரெய்னா, ஹர்பஜன் சிங் ஆகியோரிடம் அமலாக்கத் துறை விசாரணை நடத்தியது.

நாட்டில் ஏராளமான சட்ட விரோத சூதாட்ட செயலிகள் செயல்பட்டு வருவதாக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது.

கோடிக்கணக்கான நாட்டு மக்களை காப்பாற்றவும், இந்திய ஜனநாயகத்தை காப்பாற்றவும் இது போன்ற செயலியைத் தடை செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு நோட்டீஸ் அனுப்பி இருந்தது. சட்ட விரோத சூதாட்ட செயலியை ஊக்குவிக்கும் விளம்பரங்களில் கிரிக்கெட் வீரர்கள், நடிகர், நடிகைகள் ஒப்பந்தம் செய்து பிரபலப்படுத்தி வருகிறார்கள். இது தொடர்பாக தெலுங்கானா போலீசார் ஏற்கனவே நடிகர் ராணா, பிரகாஷ் ராஜ் உள்ளிட்ட 25 நடிகர்கள் மீது வழக்குப்பதிவு செய்திருந்தது.

இந்த நிலையில் சூதாட்ட செயலியை ஊக்குவிக்கும் விளம்பரங்கள் தொடர்பாக முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் யுவராஜ்சிங், சுரேஷ் ரெய்னா, ஹர்பஜன்சிங் ஆகியோரிடம் அமலாக்கத்துறை விசாரணை நடத்தியது. இதே போல நடிகர் சோனு சூட், நடிகை ஊர்வசி ரவுதேலா ஆகியோரிடமும் அமலாக்கத் துறை அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். விளம்பர பிரசாரத்துக்காக இந்த சூதாட்ட செயலியை பல்வேறு நிறுவனங்களுக்கு ரூ.50 கோடிக்கு மேல் பணம் செலுத்தியதாக அமலாக்கத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.



● சென்னை தலைமைச்செயலகத்தில் வேளாண்மை, உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் பயிர் காப்பீடு திட்டம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் வ.தட்சிணாமூர்த்தி, இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல்பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், காப்பீட்டு நிறுவன அலுவலர்கள் கலந்து கொண்டனர்.